வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 30.12.2021 வியாழக்கிழமை | இதழ் : 25 | பக்கங்கள் : 16


மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria றியா பணப்பரிமாற்றம்
Western Union வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

# அதிரடி மாற்றங்களுக்கு தயாராகும் அரசியல் களம்

## இன்று நாடு திரும்புகின்றார் பஸில்



கொழும்பு, டிசெம்பர் 30

தனிப்பட்ட பயணம் மேற்கொண்டு அமெரிக்கா சென்றிருந்த நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ இன்று நாடு திரும்பவுள்ளார்.

அமெரிக்காவிலிருந்து நேற்றிரவு கிளம்பிய அவர், டுபாய் வழியாக இன்று இலங்கை வரவுள்ளார். 15

## கிழக்கு கடலில் நிலநடுக்கம்

கொழும்பு, டிசெ. 30

இலங்கையின் கிழக்கு கடற்கரையில் இருந்து 300 கிலோ மீற்றர் தொலைவில் வங்காள விரிகுடா கடற்பரப்பில் 4.3 ரிச்டர் அளவில் நில நடுக்கம் ஏற்பட்டுள்ளது.

## பளை பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு கொரோனா தொற்று!

யாழ்ப்பாணம், டிசெ. 30

பளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்று அறிகுறிகள் தென்பட்டதை அடுத்து வைத்திய சாலைக்கு சென்று மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜென் பரிசோதனையில் அவருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த 23ஆம் 15

## ஜனவரி 5ஆம் திகதி முதல் பஸ் கட்டணமும் அதிகரிப்பு

கொழும்பு, டிசெ. 20

2022 ஜனவரி 5ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் பஸ் கட்டணத்தை அதிகரிக்கத் தீர்மானித்துள்ளதாக தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் நேற்று அறிவித்துள்ளது.

அதன்படி, குறைந்த பட்ச பஸ் கட்டணம் 17 ரூபாவாக அதிகரிக்கப்படுகின்றது எனத் தனியார் 15

## பால்மா விலை மேலும் உயரும்!

கொழும்பு, டிசெ. 30

இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் விலை அதிகரிக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பால்மா இறக்குமதியாளர்கள் சங்கத்தின் ஊடக பேச்சாளர் அசோக்க பண்டார இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

இதற்கமைய அதிகரிக்கும் விலை தொடர்பான அறிவிப்பை இன்று வியாழக்கிழமை வெளியிட எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் விலையானது கடந்த ஒக்டோபர் மாதம் அதிகரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சகல மக்களையும் சமமாக ஏற்கும் சட்டக் கட்டமைப்பை ஏற்படுத்துங்கள்

### ஜனாதிபதி செயலணியிடம் கோரிக்கைகள் முன்வைப்பு

ஹட்டன், டிசெ. 30

அனைத்து இன மக்களையும் சமமாக ஏற்றுக்கொண்டு அங்கீகாரமளிக்கும் சட்டக் கட்டமைப்பின் தேவை அத்தியாவசியமாகியுள்ளது என்று, "ஒரே நாடு, ஒரே சட்டம்" தொடர்பான ஜனாதிபதிச் செயலணியிடம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

ஹட்டனில் உள்ள தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்துக்கு வருகை தந்திருந்த "ஒரே நாடு, ஒரே சட்டம்" தொடர்பான ஜனாதிபதிச் செயலணியிடம் தமது கருத்துக்களை முன்வைத்துப் 15

## பிரதமரின் டுபாய் விஜயம் இரத்து!

### பொருளாதார நெருக்கடியே காரணம் என்கிறார் யோஷித

கொழும்பு, டிசெ. 30

டுபாய் புறப்படுவதற்குப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மேற்கொண்ட திட்டம் திடீரென இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

ஜனவரி 3ஆம் திகதி ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெறும் 15

## வடக்கு மாகாணத்தை அச்சுறுத்தும் 'டெங்கு'

### 27 நாட்களில் 265 நோயாளர்கள் அடையாளம்

யாழ்ப்பாணம், டிசெ. 30

வடக்கு மாகாணத்தில் டெங்கு நோய் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதன் வெளிப்பாடாக கடந்த 27 நாட்களில் மட்டும் 265 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆறுமுகம் கேதீஸ்வரன் இந்தத் தகவலைத் தெரிவித் 15

## கொரோனாவால் 21 பேர் மரணம்

கொழும்பு, டிசெ. 30

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 21 பேர் உயிரிழந்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் 15

## மஹிந்தவே வேண்டும்!

### அவர் ஓய்வு பெறக்கூடாது என்கிறார் ஆனந்த தேரர்

கொழும்பு, டிசெ. 30

"பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அரசியலில் இருந்து ஓய்வுபெறக்கூடாது. அவர் தொடர்ந்தும் செயற்பாட்டு அரசியலில் இருக்கவேண்டும்." - என்று அபயராம விகாரையின் விகாராதிபதி முருத்தெட் 15

## கைதான மீனவர்களை விடுவிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

### இந்திய மத்திய அரசிடம் நீதிமன்றம் கேள்வி

மதுரை, டிசெ. 30

இலங்கை சிறையில் உள்ள தமிழக மீனவர்களை விடுவித்து அழைத்துவர எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன என்பது குறித்து இந்திய மத்திய அரசு விரிவான பதில் அளிக்கவேண்டும் என உயர்நீதிமன்ற மதுரைக்கிளை நேற்று உத்தரவிட்டுள்ளது.

இராமநாதபுரம் வழக்குரைஞர் தீரன் திருமுருகன், உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தாக்கல் செய்துள்ள மனுவில், 15

## 'மொட்டு' அரசின் தலைவர் மஹிந்த; ஆட்சியைக் கவிழ்க்கவே முடியாது!

### சஜித் அணியினருக்குப் பீரிஸ் பதிலடி



கொழும்பு, டிசெ. 30

"ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவராகவும் இந்த அரசின் பிதாமகனாகவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவே உள்ளார். அவர் தலைமையிலான ஆட்சியை இனி ஒரு போதும் கலைக்க 15

# இப்படியும் நடக்கிறது...!

உயரமான அந்தக் கட்டிடத்திற்குள் மூன்று திருடர்கள் நுழைந்தனர். தாங்கள் கொண்டு வந்திருந்த பைக்குள் விலை உயர்ந்த பொருள்களை எல்லாம் எடுத்துப் போட்டுக் கொண்டிருந்தனர்.

'ஜன்னல் வழியாகக் குதிப்போம்' என்றான் ஒருவன்.

"நாம் பதின்மூன்றாவது மாடியில் இருக்கிறோம் இங்கிருந்தா குதிப்பது?" என்று கேட்டான் மற்றையவன்.

"மூட நம்பிக்கைக்கு இதுவா நேரம்" என்று கத்தினான் மூன்றாமவன்.

பதின்மூன்று என்ற இலக்கம் ராசி இல்லாத ஒன்று என்பது உலகம் எங்கும் பொதுவாக நம்பப்படுகின்ற சங்கதி.

அதனால்தான் ஆஸ்பத்திரிகளில் பதின்மூன்றாம் இலக்க வாட்டுக்கள் இருப்பதில்லை. அதிகம் ஏன் விமானத்தில் கூட பதின்மூன்றாம் இலக்கத்தில் சீற்றுக்கு நம்பர் போடமாட்டார்கள்.

அந்த நம்பிக்கை நம்மவர்களுக்கு இருக்கிறதோ இல்லையோ, நம்ம தலைவர்களுக்கு பதின்மூன்று என்றால் ஏனோ பிடிப்பதில்லை. அதனால்தான் தமிழ் பேசும் கட்சிகள் ஒன்றிணைந்து தயாரிக்கும் கோரிக்கை மனுவிலும் இந்த பதின்மூன்றை சேர்க்க சிலர் தொடர்ந்து தயங்கிவருகின்றனர்.

பதின்மூன்று தேவையில்லாதது என்று இத்தனை ஆண்டுகளாக் போராடிவருகின்ற நாங்கள் அதனை எப்படி ஏற்றுக்கொள்வது என்று கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தடாலடியாக தெரிவித்துவிட, அதற்குப்பதிலாக இலங்கை இந்திய ஒப்பந்தத்தை அமுல்படுத்தக் கேட்பது என்று முடிவெடுத்த நமது தலைவர்கள் அதற்கான இறுதி வரைவை தயாரிக்கத் தொடங்கினார்கள்.

இலங்கை இந்திய ஒப்பந்தம் ஒன்றுதான் வடக்கு கிழக்கை தமிழர் தாயகமாக ஏற்றுக்கொண்ட ஒரேயொரு சர்வதேச ஒப்பந்தம்.

பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துங்கள் என்று கேட்பதற்கும் இலங்கை இந்திய ஒப்பந்தத்தை அமுல்படுத்த கேட்பதற்கும் இடையே உள்ள வேறுபாடுகளில் முக்கியமானது அது ஒன்றுதான். ஒப்பந்தத்தை அமுல்படுத்த கோரினால்-

வடக்கு கிழக்கு இணைந்து இயங்கவேண்டும் பின்னர் அந்த மாகாணங்களில் மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பு நடாத்தி அதனை தொடர்வதா இல்லையா என்பதை முடிவுசெய்யவேண்டும். இதுவே ஒப்பந்தத்தின் முக்கிய பகுதி.

ஆனால் அந்த ஒப்பந்தம் செய்யப்பட்ட காலங்களில், முஸ்லிம்களின் பிரதான அரசியல் அமைப்பாக இருந்த முஸ்லிம் காங்கிரஸ் தமக்கென தனி அலகு கோரிக்கையை முன்வைத்திருந்தது.

அதாவது முஸ்லிம்கள் வாழ்கின்ற பகுதிகள் நிலத் தொடர்ச்சியாக இல்லாவிட்டாலும் அவற்றை ஒரு நிர்வாக அலகுக்குள் கொண்டு வந்து தனி மாகாணமாக நிர்வகிக்கவேண்டும் என்பது முஸ்லிம்களின் கோரிக்கையாக இருந்தது.

இந்தியாவில் பாண்டிச்சேரியுடன் எப்படி நிலத் தொடர்பு அற்ற காரைக்கால் இணைக்கப்பட்டிருக்கிறதோ அதேபோல முஸ்லிம்களின் பகுதிகளை இணைப்பது அந்த யோசனை.

இலங்கை இந்திய ஒப்பந்தம் செய்யப்பட்டு இப்போது முப்பத்திநான்கு வருடங்கள் ஓடிவிட்டன. இந்த காலத்தில் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களின் சனத்தொகை அபரிமிதமாக கூடி இன்னும் சில ஆண்டுகளில் அவர்களே கிழக்கில் பெரும்பான்மையாக வந்துவிடும் அளவிற்கு மாறிவிட்டது.

இனி அவர்கள் தனி அலகு கேட்கவேண்டிய தேவையே இருக்காது. இன்னும் பத்து ஆண்டுகளில் அவர்கள் அங்கு பெரும்பான்மையினராகிவிடுவார்கள் என்றார் ஒரு கிழக்கு மாகாண தமிழ் அரசியல்வாதி.

இந்த நிலையில் ஒப்பந்தத்தை நடைமுறைப் படுத்தக் கோரும் விடயத்தில் முஸ்லிம் காங்கிரசால் உடன்பட முடியமா என்பது தெரியவில்லை.

அல்லது இதனை வலியுறுத்துவதன் மூலம் அவர்களை வெளியேற்ற நடக்கும் முயற்சியா என்பதும் தெரியவில்லை.

எது எப்படியோ, இதனை நடக்கவேண்டும் என்று விரும்பியவர்கள் வெற்றிபெற்றுக்கொண்டிருக்கிறார்கள்.!

**- ஊர்க்குருவி**



## அரிசிக்கு தட்டுப்பாடில்லை

கொழும்பு, டிசெ. 30

நாட்டில் அரிசிக்கு எவ்வித தட்டுப்பாடும் இல்லையென வர்த்தகத் துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பு, புறக்கோட்டை பகுதிக்கு நேற்று கண்காணிப்பு பயணமொன்றை மேற்கொண்ட அமைச்சர், ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே இவ்வாறு கூறினார்.

"விலை அதிகரிப்பை மேற்கொள்வதற்காகவே, அரிசிக்கு தட்டுப்பாடென திட்டமிட்ட அடிப்படையில் வதந்தி பரப்பட்டுவருகின்றது. புறக்கோட்டையில் இருந்துதான் அரிசி விநிநோயகம் செய்யப்படுகின்றது. இங்கு போதுமானளவு உள்ளது. பிரதமரும் இது தொடர்பில் என்னிடம் வினவினார். அரிசிக்கு எவ்வித தட்டுப்பாடும் இல்லை.

அதேபோல துறைமுகத்தில் தேங்கியிருக்கும் அரிசி கொள்கலன்களை விடுவிப்பதற்கான டொலர்கள் வழங்கப்படும் என மத்திய வங்கி ஆளுநர் குறிப்பிட்டுள்ளார். அந்த தொகையும் சந்தைக்கு வந்த பிறகு அரிசி விலை குறையும்." -என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

## 300 அரிசி கொள்கலன்கள் கொழும்பு துறைமுகத்தில்

கொழும்பு, டிசெ. 30

இறக்குமதி செய்யப்பட்ட சுமார் 300 அரிசி கொள்கலன்கள் துறைமுகத்தில் தேங்கி இருப்பதாகவும், டொலர் நெருக்கடியால் அவற்றை விடுவிக்க முடியாதுள்ளதாகவும் அத்தியாவசிய உணவு இறக்குமதியாளர் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் நிஹால் செனவிரத்ன தெரிவித்தார்.

கொள்கலன்களை விடுவிப்பதற்கு தேவையான டொலரை நேற்று வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன உறுதியளித்தார் எனவும் நிஹால் கூறினார்.

இதேவேளை, டொலர் கிடைத்தால் மிக விரைவில் இந்தியாவில் இருந்து அரிசியை இறக்குமதி செய்ய முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

## கடந்த வாரம் மூன்று பேருக்கு ஒமைக்ரோன்!

கொழும்பு, டிசெ. 30

கடந்த வாரம் மூன்று பேருக்கு ஒமைக்ரோன் மாறுபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளதாக மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் வெளிப்படுத்தியுள்ளது.

இருப்பினும் சர்வதேச தரவுத் தளங்களில் தகவல் இன்னும் உறுதிப் படுத்தப்படவில்லை என சுகாதார நிபுணர்கள் சங்கம் கூறுகிறது.எனவே இந்த விடயம் தொடர்பாக சுகாதார அமைச்சு உரிய கவனம் செலுத்த வேண்டும் என அந்தச் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் குறிப்பிட்டார்.

ஆய்வகத்தின் தரத்தை அங்கீகரிக்காததால் இது ஏற்படக்கூடும் என தெரிவித்த அவர், இதனை தொடர்ந்தும் கண்காணித்து வரு வதாகவும் கூறினார். நீண்ட கால அங்கீகாரம் பெற் றுள்ள ஸ்ரீஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஆய்வகத்துடன் சோதனை நடத்துவது மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

### கல்வி tv CHANNEL-1

**30.12.2021**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| | மறு ஒளிபரப்பு | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

### கல்வி tv CHANNEL - 2

**30.12.2021**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
30.12.2021 வியாழக்கிழமை
பிலவ வருடம், மார்கழி 15

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம் உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

## டொலர் நெருக்கடி?

இன்று நாடு எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடியின் மையமாக இருப்பது, நாட்டில் போதியளவு டொலர் கையிருப்பில்லை. ‘டொலர் காரய’ – இப்படியொரு சொல்லை நீங்கள் முன்னர் அடிக்கடி கேட்டிருப்பீர்கள். தென்னிலங்கையின் அரசியல் மேடைகளில் இந்தச் சொல் அடிக்கடி ஒல்லிப்பதுண்டு. தங்களுடைய அரசியல் எதிரிகளான ரணில் விக்கிரமசிங்கவையும் அவருடன் தொடர்புடைய தென்னிலங்கை அரசு சாரா நிறுவன சிவில் சமூக பிரதிநிதிகளையும் இழிவுபடுத்தும் நோக்கிலேயே இந்தச் சொல்லை மஹிந்த அணியினர் பயன்படுத்துவதுண்டு. குறிப்பாக விமல் வீரவன்ச இந்த சொல்லை அடிக்கடி பயன்படுத்துவார். குறிப்பாக, அமெரிக்க சார்பானவர்களை கேலி செய்வதற்காகவே இந்த சொல்லை அவர் பயன்படுத்துவதுவார். ஆனால் இன்றோ, டொலர் இல்லாத காரணத்தினால் நாடு திண்டாடிக் கொண்டிருக்கின்றது.

அமெரிக்க டொலர்களுக்காக இலங்கையின் ஆட்சியாளர்கள் வெளியாரிடம் கையேந்தி நிற்கின்றனர். டொலர்களை கடனாக வழங்குவதன் ஊடாக இலங்கையின் அரசியலை கட்டுப்படுத்தலாம் என்னும் நிலைமை உருவாகியிருக்கின்றது. இதிலிருந்து எவ்வாறு மீள்வது?

இந்த மோசமான பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு சர்வதேச நாணய நிதியத்திடம் செல்ல வேண்டுமென்று பலரும் வலியுறுத்திவருகின்றனர். ஆனால் அரசாங்கம் தொடர்ந்தும் அதனை இழுத்தடித்து வருகின்றது. நாணய நிதியத்திடம் செல்வதை விடவும் சீனாவிடமும் இந்தியாவிடமும் செல்வதையே அரசாங்கம் முதல் தெரிவாக வைத்திருக்கின்றது.

பொருளாதார நெருக்கடிகளில் சிக்கியிருக்கும் நாடுகளை மீட்பதற்கு சர்வதேச நாணய நிதியமே மிகச் சிறந்த தெரிவாக இருக்கின்றது. ஆனால் இலங்கையில், சர்வதேச நாணய நிதியம் தொடர்பில் தவறான பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அதாவது, நாணய நிதியத்திடம் சென்றால், அவர்கள் நாட்டை கட்டுப்படுத்துவார்கள் என்னும் பொய்யான பிரச்சாரம் செய்யப்படுகின்றது.

ஒரு நாடு பொருளாதார ரீதியாக வங்குரோத்து நிலைக்குள் செல்லும் போது – அது ஏனைய நாடுகளின் பொருளாதார நிலையையும் பாதிக்கும். இந்த அடிப்படையில், உலக பொருளாதாரத்தை சமநிலையில் பேணிப் பாதுகாக்கும் நோக்கில்தான் நாணய நிதியம் நாடுகளுக்கு உதவுகின்றது. ஒரு குறிப்பிட்ட காலம் வரையில், சர்வதேச நாயண நிதியம் கட்டமைப்புசார் சீரமைப்பு என்னுமடிப்படையில் நாடுகள் மீது சில நிபந்தனைகளை விதித்ததுண்டு. ஆனால் தற்போது அவ்வாறான நிலைமையில்லை. கடன்களை வழங்குவதற்கு, நாடுகள் மீது எந்தவொரு நிபந்தனையையும் நாணய நிதியம் விதிப்பதில்லை. ஒரு நாட்டின் பொருளாதாரத்தை சீர் செய்தல் என்னுமடிப்படையில் மட்டுமே, கடன்கள் வழங்கப்படுகின்றன. ஒரு நாட்டின் மனித உரிமைகள் நிலைமைக்கும், நாணய நிதியத்தின் உதவிகளுக்கும் எவ்வித தொடர்புமில்லை. நாணய நிதியத்தின் கொள்கையில் மனித உரிமை சார்ந்த நிகழ்சிநிரல் இல்லை. ஒரு நாட்டை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்பது மட்டும்தான் நாணய நிதியத்தின் நோக்கம்.

இன்றைய டொலர் நெருக்கடியிலிருந்து தப்புவதற்கு சர்வதேச நாணய நிதியம் ஒன்றுதான் ஒரேயொரு ஆகச் சிறந்த தெரிவாகும். ஆனாலும் ஏதோவொரு காரணத்திற்காக அரசாங்கம் நாணய நிதியத்திடம் செல்லும் பரிந்துரையை தொடர்ந்தும் புறக்கணித்து வருகின்றது. டொலர்கள் இல்லாத காரணத்தினால், துறைமுகத்தில் கொள்கலன்கள் தேங்கிக் கிடக்கின்றன. பொருட்களின் விலைகள் தொடர்ந்தும் அதிகரித்துச் செல்கின்றன. சாதாரண மக்களால் தாங்கிக் கொள்ள முடியாதளவிற்கு நிலைமை மோசமடைகின்றது. இவ்வாறான நிலைமை தொடர்ந்தால் ஏழை மக்கள் மத்தியில் பஞ்சம் ஏற்படவும் வாய்ப்புண்டு. இது நாட்டில் அமைதியின்மையையும் ஏற்படுத்தும்.

# 13ஆவது திருத்த அமுலாக்கம் தொடர்பில் தமிழ் - முஸ்லிம் கட்சிகள் இணைவது காலத்தின் தேவை!

**அலசுவது இராஜதந்திரி**

*இந்தியப்பிரதமர் நரேந்திரமோடிக்கு 13ஆவது திருத்தச்சட்டத்தின் அமுலாக்கத்தை இலங்கை அரசிடம் வலியுறுத்தக் கோரி தமிழ்பேசும் கட்சிகள் அனுப்புவதற்கு உத்தேசித்திருந்த கடிதத்தில் கையொப்பமிடுவதற்கு முஸ்லிம் கட்சிகள் பின்வாங்கி வருவதை அறியமுடிகின்றது.*

*ஓரிருவாரங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சித்தலைவர் ரவூப் ஹக்கீம் தமிழ் பேசும் கட்சிகளோடு நடத்திய கூட்டமொன்றில் வடக்கு - கிழக்கு தமிழர்களின் அபிலாஷைகளை பூர்த்திசெய்ய தமது கட்சி உறுதுணையாக இருக்குமென்று குறிப்பிட்டிருந்தார்.*

*ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகர் எம்.எச்.எம்.அஷ்ரப் தமது அரசியல் கூட்டமொன்றில் அன்று பேசியபோது வடக்கு - கிழக்கு தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாஷைகள் பூர்த்திசெய்யப்படும் பட்சத்திலேயே முஸ்லிம்களுடைய அரசியல் பிரச்சினைகளுக்கும் தீர்வொன்றைக்காண முடியுமென்று குறிப்பிட்டிருந்தார்.*

*ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபக தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப் ஒருதடவை தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபர் காலஞ்சென்ற அ.அமிர்தலிங்கத்தின் நினைவஞ்சலிக்கூட்டமொன்றில் உரையாற்றியபோது தமிரசுக்கட்சியிலேயே தமது அரசியல் பயணத்தை ஆரம்பித்ததாக குறிப்பிட்டிருந்தார்.*

*இருந்தபோதிலும் வடக்கு - கிழக்கில் ஆயுதப்போராட்டம் விரிவடைந்தமையும் அதனையடுத்து துரதிஷ்டவசமாக முஸ்லிம்கள் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்டமை மற்றும் கிழக்கிலே காத்தான்குடி பள்ளிவாசல் படுகொலைகள் என்பவை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸையும் அதனுடைய அரசியல் நிலைப்பாடுகளையும் பலமடைய வைத்திருந்தன.*

*இந்நிலையில் 1987ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தையடுத்து இலங்கையரசியல் அமைப்பில் 13ஆவது திருத்தச்சட்டம் மாகாணசபை அதிகாரங்களோடு இணைந்த வடக்கு - கிழக்கையும் உறுதிப்படுத்தியிருந்தது.*

*ஆயினும் தற்போது வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இரு வேறாகவும் கிழக்கிலே முஸ்லிம்களின் தனித்துவத்தை அங்கீகரிக்கும் வகையில் ஒரு தனியலகும் காணப்படுகின்றது. ஆயினும் 13ஆவது திருத்தச்சட்டமே தமிழ் பேசும் மக்களென்ற அடிப்படையில் தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் உறுதுணையாக இருப்பதை அவதானிக்க முடிகின்றது.*

*13ஆவது திருத்தச்சட்டத்தை பொறுத்தவரை அதன் அமுலாக்கம் இதுவரை முழுஅளவில் மேற்கொள்ளப்படாவிடினும் அதனூடாகவே தமிழ்பேசும் தரப்பினர் என்ற வகையில் தமிழர்களும் முஸ்லிம்களும் தமது அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்ற வேண்டியவர்களாக இருக்கின்றனர். இதனை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மாத்திரமல்ல. ஏனைய முஸ்லிம் கட்சிகளும் உணர வேண்டியது இன்றியமையாததாகின்றது.*

*இருந்தபோதிலும் 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுலாக்குவது விடயத்தில் முஸ்லிம் அரசியல் கட்சிகள் தமது சொந்த அரசியல் நலன்களுக்கு முக்கியத்துவம் அளிப்பது கவலை தருவதாக இருக்கின்றது. தென்னிலங்கை அரசியலைப்பொறுத்தவரை முஸ்லிம்கள் தமிழ்பேசும் மக்களென்ற அடிப்படையிலேயே தமது அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றமுடியுமே தவிர வேறெந்த விதத்திலும் தமக்கென ஓர் அரசியல் நிலைப்பாட்டை கொண்டிருக்கமுடியாது.*

*அவர்களது அரசியல் ரீதியான கோரிக்கைகள் தென்னிலங்கையில் தேசிய அரசியல் கட்சிகளோடு சேர்ந்திருப்பதன் மூலமே நிறைவேற்றப்பட முடிகின்றதே தவிர முஸ்லிம்கள் தமது தனித்துவத்தை மொழியடிப்படையில் பேணுவதானால் தமிழ்பேசும் கட்சிகளென்ற அடிப்படையிலேயே இயங்கமுடியும்*

*இந்த அபிப்பிராயத்தை மையப்படுத்தியே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் அண்மையில் யாழ்ப்பாணத்தில் பேசிய கூட்டத்திலும தமிழரசியல் தரப்புக்கு தனது ஆதரவை வெளிப்படுத்தியிருந்தார்.*

*இதனடிப்படையிலேயே முஸ்லிம் அரசியல்வாதிகளின் ஒத்துழைப்பையும் பெறமுடியுமென்ற நம்பிக்கையில் தமிழ் அரசியல்தரப்பினர் இந்தியப்பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பவேண்டிய 13-வது திருத்தச்சட்டம் பற்றிய கடிதத்திற்கும் முஸ்லிம் கட்சிகளின் ஆதரவை எதிர்பார்த்திருந்தனர்*

*ஆனால் பிரதமர் நரேந்திர மோடிக்கான கடிதத்திற்கு ஒப்புதலை வழங்குவதில் முஸ்லிம் அரசிய் தரப்பிலிருந்து வரக்கூடிய தாமதமான போக்கு வடக்கு - கிழக்கு தமிழ் பேசும் மக்களென்ற அடிப்படையில் அவர்களது அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றுவதில் பெரும் சிக்கல்களை தோற்றுவிக்குமென்றே கருதமுடியும்.*

*தமிழ்பேசும் அரசியல் தரப்பு என்ற ரீதியில் முஸ்லிம்களும் உள்வாங்கப்பட்டுள்ளமை அவர்களது நலன்களை பெரிதும் பாதுகாக்க உதவுமென்றே கருதமுடியும்.*

*எனவே கொள்கை ரீதியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் ஏனைய முஸ்லிம் கட்சிகள் தமிழ் அரசியல் கட்சிகளோடு வேறுபாடுகளைக் கொண்டிருக்கலாம். ஆனால் முஸ்லிம்களும் சிறுபான்மை இனத்தவர்களென்ற அடிப்படையில் பேரினவாதசக்திகளின் அழுத்தங்களை தாக்குப்பிடிப்பதற்கு தமிழ்பேசும் கட்சிகள் என்பதன் அடிப்படையில் ஒன்றிணைந்திருப்பதே நன்மையளிப்பதாக இருக்கும்.* *(15ஆம் பக்கம் பார்க்க)*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
சுபச்செலவு ஏற்படும். மகிழ்ச்சிகரமான சூழ் நிலையை காண்பீர்கள். உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உற்சாகமான நாள். மனதில் இருந்த கவலைகள் தீரும். நட்பு வட்டம் விரியும்.

**இடபம்**
மேலதிகாரியிடம் இருந்து எதிர்பாராத உதவி கிடைக்கும். எதிரிகள் என்று நினைத்தவர்கள் நட்புக்கரம் நீட்டுவார்கள். பிறருக்கு உதவி செய்வதில் உங்களுக்கு மன நிறைவு ஏற்படும்.

**மிதுனம்**
சிறு சிறு சிக்கல்கள் ஏற்படும். கவலை வேண்டாம். வாழ்வில் சந்தோஷத் திருப்பம் உண்டு. முயற்சியில் வெற்றி கிடைக்கும். நினைத்ததை சாதிப்பீர்கள். வருமானம் அதிகரிக்கும்.

**கடகம்**
இயந்திரம் ஒன்று பழுதாவதால் சிறு தாமதம் ஏற் படக்கூடும். உங்களது முயற்சிகள் நிறைவேறுவதில் காலதாமதமாகக்கூடும். மாணவர்கள் கல்வியில் சற்று கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

**சிம்மம்**
பூர்வீக சொத்துக்களால் ஏற்பட்ட பிரச்னைகள் அனைத் தும் தீரும். மனதில் புது நம்பிக்கை துளிர்ப்பதால் உற்சாகம் அடைவீர்கள். குடும்பத்தினருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள். கவலை தீரும்.

**கன்னி**
எதிர்காலம் சம்பந்தப்பட்ட முயற்சியில் முழு கவனத்துடன் இறங்குங்கள். அதிக முயற்சி எடுத்து சகஊழியர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். பெரிய மனிதர்களின் அறிமுகம் கிடைக்கும். மகிழ்ச்சி.

**துலாம்**
சிறு சாதனை காரணமாக மகிழ்ச்சி வரும். உத விகள் உண்டு. பழைய பிரச்னை தீரும். வருமானம் அதிகரிக்கும். நிம்மதி நிலவும். எதிரான கருத் துடையோர் மனம் மாறுவர். உடல்நலம் மேம்படும்.

**விருட்சிகம்**
முயற்சிகளில் மெதுவான வெற்றியே கிடைக்கும். பணம் வரும். பிறரிடம் இருந்து உதவி ஓரளவே கிடைக்கும். மனதிடம் அதிகரிக்கும். புதிய சொத் துக்கள் வாங்கும் திட்டத்தில் முன்னேற்றம்.

**தனுசு**
குழந்தைகளின் உடல் ஆரோக்கியத்தில் இருந்த பிரச்னை தீரும். பொருளாதார நெருக்கடியால் சற்று பாதிப்பு ஏற்படலாம். உறவினர் ஒருவரை பற்றி கவலை அளிக்கும் செய்தி வரும்.

**மகரம்**
உங்களது அலட்சியப்போக்கினால் சிறு பிரச்னைக்கு ஆட்பட நேரிடும். எதிரிகளாக இருந்தவர்கள் நண் பர்களாக மாறுவர். மகிழ்ச்சி கூடும். விரயம் கூடும். பிரியமானவரிடம் யோசித்து பேசுவது நல்லது.

**கும்பம்**
அலுவலக ரகசியங்களை பிறரிடம் பகிர்ந்து கொள்ள வேண்டாம். தொழில், பணியில் வளர்ச்சி காண்பீர்கள். மன தைரியம் கூடும். உடல் ஆரோக் கியம் சீராகும். நீண்ட நாள் கவலை தீரும்.

**மீனம்**
எதிர்பாராத நன்மை ஒன்று நிகழும். யோகமான நாள். பகை தீரும். பிறர் பழிக்கும்படியான செயல் களை செய்யாதிருப்பது நல்லது. உங்களின் அவசர பேச்சினால் இக்கட்டில் மாட்டாமல் கவனமா யிருங்கள்.

# 7 தமிழர்களின் விடுதலைக்கு தமிழக ஆளுநர் ஒப்புதல் அளிக்க வேண்டும்

## பா. ம. க. பொதுக்குழுவில் நேற்று தீர்மானம்

சென்னை, டிசெ. 30

பேரறிவாளன் உள்பட 7 தமிழர்களின் விடுதலைக்கு தமிழக அளுநர் ஒப்புதல் அளிக்க வேண்டும் எனக் கோரும் தீர்மானம் பா.ம.க.வின் பொதுக்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

பா.ம.க.வின் புத்தாண்டு சிறப்பு பொதுக்குழு கூட்டம், "2021 ஆம் ஆண்டுக்கு விடை கொடுப்போம். 2022 ஆம் ஆண்டை வரவேற்போம்" என்ற தலைப்பில் சென்னை சேப்பாக்கம் சுவாமி சிவானந்த சாலையில் உள்ள அண்ணா அரங்கத்தில் நேற்று காலை நடந்தது.

இந்த சிறப்பு பொதுக்குழு கூட்டத்தில் பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ், இளைஞர் அணி தலைவர் அன்புமணி ராமதாஸ் ஆகியோர் பங்கேற்று பேசினார்கள். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

நீட் விலக்கு சட்டத்துக்கு குறிப்பிட்ட காலவரையறைக்குள் ஒப்புதல் பெற்று 2022-23ஆம் ஆண்டு மருத் துவ மாணவர் சேர்க்கையை 12ஆம் வகுப்பு மதிப்பெண் அடிப்படையில் நடத்துவதற்கு தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் வன்னியர்களுக்கான 10.5 சதவீதம் உள் இட ஒதுக்கீட்டை மீட்டெடுப்பதற்காக சட்ட போராட்டம் முன்னெடுக்கப்படும்.

அனைத்து சமூகங்களுக்கும் அவர்களின் மக்கள் தொகை அடிப்படையில் இட ஒதுக்கீடு வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழ்நாடு அரசு பணிகளில் 100 சதவீதமும், தனியார் வேலைவாய்ப்புகளில் 80 சதவீதமும் தமிழர்களுக்கே வழங்கப்படுவதை உறுதி செய்ய சட்டம் இயற்ற வேண்டும்.

துணைவேந்தர்களை நியமிக்கும் அதிகாரத்தை மாநில அரசுக்கு வழங்க பல்கலைக்கழக சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டும். தமிழ்நாட்டில் மழை-வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ரூ.5 ஆயிரம் நிதி உதவி வழங்க வேண்டும்.




மழை -வெள்ள பாதிப்பில் தமிழக அரசு கோரிய ரூ.4,626 கோடி நிதியை மத்திய அரசு தாமதமின்றி வழங்க வேண்டும்.

சென்னை-சேலம் 8 வழி சாலை திட்டத்தை தமிழ்நாட்டின் மீது மத்திய அரசு மீண்டும் திணிக்க கூடாது. பேரறிவாளன் உள்பட 7 தமிழர்களின் விடுதலைக்கு தமிழக அளுநர் ஒப்புதல் அளிக்க வேண்டும்.

மேற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பொதுக்குழுக் கூட்டத்தில் ஜி.கே.மணி, ஏ.கே.மூர்த்தி, வடிவேல் ராவணன், வக்கீல் பாலு, கே.என்.சேகர், மாவட்ட தலைவர்கள் ராசு, வெங்கடேசன், வெங்கடேச பெருமாள், சுப்பிரமணியம், சத்தியா, ஸ்ரீராம் ஐயர், வி.ஜெ. பாண்டியன், ஏழுமலை உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# ஏழு தமிழர்களின் விடுதலையில் தி. மு. க. நிலைப்பாடு மாறிவிட்டது

## கடுமையாகச் சாடுகின்றார் சீமான்

சென்னை, டிசெ. 30

"ஏழு தமிழர்களின் விடுதலையில் திமுகவின் நிலைப்பாடு தேர்தலுக்கு முன்பு ஒன்றாகவும், ஆட்சிக்கு வந்த பிறகு வேறு விதவாக இருக்கிறது. அவர்களுடைய நிலைப்பாடு இப்போது மாறிவிட்டது" என நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

2016 இல் இலங்கை தூதரகத்தை முற்றுகையிட்டதாக தொடரப்பட்ட வழக்கில் முன்னிலையாககாததால் சீமானுக்கு எழும்பூர் நீதிமன்றம் அழைப்பாணை பிறப்பித்தது. இந்த வழக்கில் நேற்று முன்தினம் முன்னிலையான சீமானை மீண்டும் பெப்ரவரி 16-ஆம் திகதி நேரில் முன்னிலையாகமாறு எழும்பூர் 14 ஆவது நீதிமன்ற நடுவர் பால சுப்பிரமணி உத்தரவிட்டார்.

அதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய சீமான், 200 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட பிரிட்டிஷ் கட்டடங்கள் இன்றைக்கும் நிலைத்து நிற்கும் போது, திருவொற்றியூர் கட்டடத்தின் தன்மை இப்படி இருப்பதற்கு ஆட்சியாளர்களின் தவறு என குற்றம்சாட்டினார்.

மேலும், 7 தமிழர்களின் விடுதலையில் திமுகவின் நிலைப்பாடு தேர்தலுக்கு முன்பு ஒன்றாகவும், ஆட்சிக்கு வந்த பிறகு வேறு விதவாக இருப்பதாகவும் அவர் சாடினார்.

நகர்புற உள் ளாட்சி தேர்தலில் நாம் தமிழர் கட்சி தனித்து போட்டியிடும் என்றும், அதற்கு தாங்கள் தயாராகி வருவதாகவும் சீமான் தெரிவித்தார்.

# தமிழகத்தில் 45 பேருக்கு ஓமைக்ரோன்

சென்னை, டிசெ. 30

தமிழகத்தில் மேலும் 11 பேருக்கு ஓமைக்ரோன் பாதிப்பு உறுதியானதால் மொத்தம் 45 பேருக்கு ஒமைக்ரோன் தொற்று ஏற்பட்டுள்ளதாக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று காலை மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சுகாதாரத் துறைச் செயலர் ஜெ.ராதாகிருஷ்ணன், சென்னை மாநகராட்சி ஆணையர் ககன்தீப் சிங் பேடி ஆகியோர் கூட்டாக பத்திரிகையாளர்களை சந்தித்தனர். அப்போது அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறியதாவது:

நாடு முழுவதுமே கொரோனா தொற்றின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. அந்த வகையில் தமிழகத்தில் சென்னையிலும் தொற்றின் எண்ணிக்கை அதிகரித்துள் ளது. நேற்று முன்தினம் சென்னையில் 194 பேருக்கு கொரோனா தொற்று உறுதியா னது. இந்நிலையில், சென்னை அசோக் நகர், எல்.ஜி.ஜி.எஸ் காலனி 19வது தெருவில் உள்ள இரண்டு வீட்டில் 10 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப் படுத்தப்பட்டுள்ள நிலையில், அந்தப் பகுதி தனிமைப்படுத்தப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மக்கள் அனைவருமே முகக்கவசம் அணியவும், இரண்டு டோஸ் தடுப்பூசி செலுத்திக் கொள்ளவும் அறிவுறுத்தப்படுகிறார்கள். தமிழகத்தில் ஓமைக்ரோன் பாதித்த 45 பேரில் 16 பேர் மட்டுமே சிகிச்சை பெற்று வருகிறார்கள். மற்றவர்கள் சிகிச்சை முடிந்து வீடு திரும்பியுள்ளனர். அனைவருமே அறிகுறிகள் அற்ற பாதிப்புடன் உள்ளனர்.




இவர்களைத் தவிர 120 பேருக்கு எஸ் ஜீன் குறைபாடு கண்டறியப்பட்டு ஆய்வுக்கு அனுப்பப்பட்டுள்ளது. வேகமாகப் பரவும் ஒமைக்ரான் தொற்றைக் கட்டுப்படுத்த தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் 15 முதல்18 வயது வரையிலான மாணவர்களுக்கு தடுப்பூசி செலுத்தும் திட்டத்தை வரும் 3ஆம் திகதி சென்னை போரூர் பகுதியில் முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார். மேலும், மாணவர்களுக்கு பள்ளிகளிலேயே தடுப்பூசி செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது" என அவர் மேலும் தெரிவித்தார்.

# ஜனாதிபதி முடிவெடுத்தால் வெளியேறுவோம்!



## அமைச்சர் கம்மன்பில அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 30
"அமைச்சரவையில் இருந்து நீக்கப்பட்டால் அந்த முடிவை கௌரவமாக ஏற்பதற்கு நான் தயார்."

- இவ்வாறு அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

"அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சரின் பதவியை எந்நேரத்தில் வேண்டுமானாலும் ஜனாதிபதி மாற்றலாம். அதற்கான அதிகாரம் அவருக்கு உள்ளது. எனவே, அத்தகையதொரு முடிவை ஜனாதிபதி எடுத்தால் வெளியேறுவதற்கு நான் தயார்.

எமது பக்கத்தில் தவறில்லை என்பதாலேயே வெளியேறாமல் அரசுக்குள் இருக்கின்றோம்"

- என்றார்.

அதேவேளை, அமைச்சர்களான வாசுதேவ நாணயக்கார, உதய கம்மன்பில மற்றும் விமல் வீரவன்ச ஆகிய மூவரையும் அமைச்சரவையில் இருந்து நீக்க வேண்டும்என்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் உறுப்பினர்கள் வலியுறுத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# மனோவையும் ஹக்கீமையும் சர்வதேசமே இயக்குகின்றது

## அமைச்சர் விமல் கண்டுபிடிப்பு



கொழும்பு, டிசெ. 30

**"மனோ கணேசன், ஹக்கீம் போன்றவர்கள் இணைந்து 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் முன்னெடுக்கும் வேலைத் திட்டங்களின் பின்னணியில் சர்வதேச நிகழ்ச்சி நிரலே இருக்க முடியும். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு ஏனைய நாடுகளும் தமது அரசியல் பொதிகளைத் திணிக்க நினைக்கின்றன."**

- இவ்வாறு கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

"நாடு இன்று பாரிய நெருக்கடி நிலைமைகளை எதிர்கொண்டுள்ளதுடன் சில இறுக்கமான தீர்மானங்களை எடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தையோ ஏனைய நாடுகளையோ நாடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்த முயற்சிகளின் போதும் நாட்டின் பலவீனத்தைக் கருத்தில் கொண்டு தத்தமது நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்த சர்வதேச சக்திகள் முயற்சிக்கின்றன.

13ஆவது திருத்தம் மீண்டும் பொது விவாதத்துக்கு வந்துள்ளது. மனோ கணேசன், ஹக்கீம் போன்றவர்கள் ஒன்றிணைந்து 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் கலந்துரையாட ஆரம்பித்திருக்கின்றனர்.

ஜி.எஸ்.பி பிளஸ் சலுகைக்காக ஐரோப்பிய ஒன்றியம் சில நிபந்தனைகளை முன்வைக்கும், ஐ.நா. மனித உரிமைகள் பேரவை சில நிபந்தனைகளை முன்வைக்கலாம். இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளும் தமது நிதியைப் பெற்றுக்கொள்ள சில நிபந்தனைகளை முன்வைக்கும். இது பலவீனமான நிலையில் இருக்கும் ஒரு நாட்டின் மீதான அழுத்தங்கள் என்றே நாம் கருதுகின்றோம்.

அரசு மிகவும் அவதானமாக தீர்மானம் எடுக்க வேண்டிய கட்டாய நிலை உருவாகியுள்ளது" - என்றார். (இ)

# வீதி விபத்தில் யுவதி காயம்!

ஹட்டன், டிசெ. 30
ஒருவர் பயணித்த மோட்டார் சைக்கிள் வீதியின் ஓரத்தில் தரிக்கப்பட்டிருந்த ஓட்டோவுடன் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

ஹட்டன் - நுவரெலியா பிரதான வீதியில் ஹட்டன் குடாகம பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில், மோட்டார் சைக்கிளில் பயணித்த யுவதி படுகாயமடைந்துள்ளார் என்று ஹட்டன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எதிர்த்திசையில் வந்த டிப்பரைக் கண்டு குறித்த யுவதி அச்சமடைந்ததால் அவர் பயணித்த மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து ஓட்டோவுடன் மோதியுள்ளது என விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (இ)




# கடுப்பாகியுள்ள மக்கள் வெடிக்கத் தொடங்குவர்



## அரசுக்கு ரணில் எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 30
"நாட்டில் டொலர் பிரச்னை மிகவும் மோசமாக மாறியுள்ளது. அதன் சுமையை மக்கள் சுமக்க முடியாத நிலைக்கு வந்துள்ளனர்."

- இவ்வாறு முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

விசேடமாக வர்த்தக நடவடிக்கைகள் பாதிப்படைந்துள்ளதுடன், வேலைவாய்ப்பு திண்டாட்டம் அதிகரித்துள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் வெளியிட்டுள்ள விசேட அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"விவசாயிகள் செய்தவறியாது தவிக்கின்றனர். இந்தப் பிரச்சினைக்கு உடனடியான தீர்வு அவசியம்.

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உலக நாடுகள் அனைத்தும் முகம் கொடுத்திருந்தாலும் 2020 மற்றும் 2021 ஆண்டுகளில் பல நாடுகள் பொருளாதார முன்னேற்றத்தைக் காட்டியுள்ளதால், நாமும் இந்தப் பிரச்னையைத் தீர்க்கவேண்டும்.

அரசுக்குக் கடமையொன்று உள்ளது. உடனடியாக சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறுவது அல்லது இதற்கான ஏற்றுக்கொள்ளப்பட்ட மாற்றுத் தீர்வொன்றை முன்வைக்க வேண்டும். ஆனால், இரண்டும் நடக்கவில்லை. இதனால் மக்கள் கடுப்பில் இருக்கின்றனர்.

இந்த நாட்டில் உணவுத் தட்டுப்பாடு ஒன்று ஏற்படவுள்ளது எனப் பலரும் எச்சரிக்கின்றனர். கிடைக்கப்பெறும் தகவல்களுக்கு அமைய எதிர்வரும் தமிழ் - சிங்களப் புத்தாண்டுக் காலத்தில் நாட்டில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படும். ஏனெனில், நாட்டின் பல பிரதேசங்களில் பெரும்போக அறுவடை ஏனைய பெரும்போக அறுவடைகளை விட 60 சதவீதமே இம்முறை கிடைத்துள்ளது.

இந்தநிலை ஏற்பட்டால் முகம் கொடுக்கக்கூடிய அரசியல் பின்னணி குறித்து யோசிக்க வேண்டும். கடுப்பாகியுள்ள மக்கள் வெடிக்கத் தொடங்குவர். அவ்வாறு அவர்களின் கோபம் வெடிக்கும்போது, அது அரசையும் பாராளுமன்றத்தையும் பாதிக்கும் என்றார்.

எனவே, நாட்டை முன்னேற்ற வேண்டுமாயின் அதனைத் தடுப்பது அவசியம். தற்போது அரசு கடனுக்கு எரிபொருள் மற்றும் உணவுப் பொருள்களை கொள்வனவு செய்ய இந்தியாவுடன் கலந்துரையாடலை முன்னெடுக்கின்றது. அந்தக் கலந்துரையாடலை உடனடியாக நிறைவு செய்ய வேண்டும். அதேபோல் இதற்காக இந்தியாவுடன் செய்துகொள்ளவுள்ள ஒப்பந்தங்களையும் நிறைவு செய்யுங்கள்.

எரிபொருள், உணவுப் பொருள்களைக் கடனுக்குக் கொள்வனவு செய்வதால் வெளிநாட்டு கையிருப்புப் பிரச்னைக்குத் தீர்வு கிடைக்காது.

எனினும், தற்போதைய பிரச்னைக்கு இது தற்காலிக தீர்வாக அமையும்" - என்றார். (இ)

# இரு கப்பல்கள் வந்துள்ளன; காஸ் தட்டுப்பாடும் நீங்கும்!

## லிட்ரோ நிறுவனம் தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 30
நாளாந்த சமையல் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளுக்காகத் தேவைப்படும் எரிவாயுவை கூடிய விரைவில் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

தற்போது நாளாந்த எரிவாயு தேவையை பூர்த்தி செய்யும் நோக்கில் எரிவாயுவை ஏற்றிய இரு கப்பல்கள், சிலிண்டர்களுக்கு எரிவாயு நிரப்பும் நிலையங்களை வந்தடைந்துள்ளன என்றும் லிட்ரோ நிறுவனம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தையின் தேவைகளில் 80 சதவீதமான எரிவாயுவை தமது நிறுவனம் விநியோகிக்கின்றது. நுகர்வோர் விவகார அதிகார சபையின் தரம் மற்றும் கண்காணிப்பின் கீழ் தயாரிப்பு பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, இதற்கு முன்னர் சந்தைக்கு விநியோகிக்கப்பட்ட நீலம் மற்றும் கறுப்பு நிற முத்திரையிடப்பட்ட எரிவாயு சிலிண்டர்களை மீளப் பெறுவதற்கான தொழில்நுட்ப ரீதியான நடவடிக்கைகள் முன்னெடுத்துள்ளதாகவும் நிறுவனம் கூறியுள்ளது.

எதிர்காலங்களில் தாமதமின்றி எரிவாயுவை வழங்கும் இயலுமை தமது நிறுவனத்துக்கு உள்ளதாகவும் லிட்ரோ நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)




பருத்தித்துறை புலோலி வடமேற்கு அறிவகம் சனசமூக நிலையத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

கலாபூசணம் விருதைப் பெற்ற நிலைய அங்கத்தவர் அ.செல்வரத்தினமும், ஜே/412 கிராம சேவகராக கடமையாற்றி இளைப்பாறிய கிராம சேவகர் பொ.தயாநிதியும் கௌரவிக்கப்பட்டனர். இந்த நிகழ்வில் ஜே/412 கிராம சேவகர், அறிவகம் சனசமூக நிலைய உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ)

# 2022 இல் அரசுக்கு பெரும் சவால்கள்!

## கூறுகிறார் அமைச்சர் தினேஷ்



கொழும்பு, டிசெ. 30

**கொரோனா வைரஸ் சூழ்நிலையால் அடுத்த வருடத்தில் அரசாங்கம் பெரும் சவால்களை எதிர் கொள்ள நேரிடும் மக்கள் ஐக்கிய முன்னணியின் என்று தலைவரும் கல்வி அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை பெற்றுக்கொடுத்தல் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அது தொடர்பில் அரசாங்கத்தின் உயர்மட்ட அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளதுடன் ஏனைய மக்கள் முகம்கொடுக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதற்காக சிறந்த முகாமைத்துவத்துடனான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்படவேண்டும்- என்றார். (அ)

# 85 மில்லியன் டொலரை இலங்கைக்கு வழங்குகிறது ஆசிய அபிவிருத்தி வங்கி

கொழும்பு, டிசெ. 30

இலங்கையினால் சைனோபாம் கோவிட் தடுப்பூசிகளை கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்ட தொகையை திருப்பிச் செலுத்துவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது.

இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன இதனைத் தெரிவித்தார். இதற்காக 85 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி இணங்கியுள்ளதாக அவர் மேலும் கூறினார். (அ)





# இலங்கை முதலுதவிச் சங்கத்தின் விருது வழங்கல் கோண்டாவிலில்

வடமராட்சி, டிசெ. 30

இலங்கை முதலுதவி சங்கத்தின் 46 ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு 2021 ஆம் ஆண்டுக்கான வாழும்போதே வாழ்த்துதல் விருது வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் பிற்பகல் யாழ்ப்பாணம் கோண்டாவில் தனியார் விடுதி ஒன்றில் இடம் பெற்றது.

இலங்கை முதலுதவி சங்கத்தின் தேசிய ஆணையாளர் சிவத்திரு வை மோகனதாஸ் தலைமையில் இடம்பெற்ற குறித்த விருது வழங்கும் நிகழ்வில் சிவகுரு ஆதீன குரு முதல்வர் வேலவன் சுவாமிகள் முன்னிலை வகித்தார்.

இதில் பிரதம அதித்தியாக வவுனியா பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், சிறப்பு அதிதிகளாக வவுனியா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் கலாநிதி த. மங்களேஸ்வரன், யாழ்.மாநகர சபையின் முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன், கரைச்சி பிரதேச சபை தவிசாளர் வேழமாலிகிதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆசி உரையை சிவகுரு ஆதீன குருமுதல்வர் வணக்கத்துக்குரிய வேலவன் சுவாமி வழங்கியதை தொடர்ந்து தலைமை உரையை இலங்கை முதலுதவிச் சங்க தேசிய ஆணையாளர் வை.மோகனதாஸ் வழங்கினார். கருத்துரையை யாழ்.மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் நிகழ்த்தினார்.

இதில் தேசகீர்த்தி, சமூக ஜோதி, மக்கள் திலகம் , ஆகிய விருதுகள் 60 பேருக்கு வழங்கி வைக்கப்பட்டதுடன் சிறப்பாக செயலாற்றிய 40 இலங்கை முதலுதவிச் சங்க தொண்டர்களும் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (அ-02)

# பாலுக்கும் தட்டுப்பாடு?

கொழும்பு, டிசெ. 30

திரவ பாலைப் பொதி செய்வதற்காக இறக்குமதி செய்யப்படும் பொதிகளுக்கு அரசாங்கம் 5 வீத வரி விதிப்பதால் உள்ளூர் திரவ பால் தொழில்துறை பல பிரச்னைகளை எதிர்நோக்கி வருவதாக தேசிய கால்நடை சபை தெரிவித்துள்ளது.

திரவ பால் மீதான வரியை நீக்குமாறு அரசாங்கத்திடம் பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பால்மா இறக்குமதி செய்யப்படாத சூழலில் உள்ளூர் திரவப் பாலுக்கு வரி விதிக்கப்பட்டமை தொழில்துறையையும் அதன் பொறிமுறைகளையும் பாதித்துள்ளதாக அந்தச் சபை குறிப்பிட்டது.

பொதியிடல் மீது விதிக்கப்படும் 5 வீத வரி காரணமாக, திரவப் பாலின் விலையை அதிகரிப்பதற்கான யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும், திரவப் பாலின் விலையை அதிகரிப்பதற்கு இதுவரை தீர்மானிக்கவில்லை என தேசிய கால்நடை சபை தெரிவித்துள்ளது. (அ)

# சர்வதேச நாணய நிதியத்தை நாடினால் நீண்டகாலப் பிரச்னையை ஏற்படுத்தும்

## அரசிடம் திஸ்ஸ விதாரண எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 30

பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் அரசின் வீண் செலவுகள் வரையறையற்ற வகையில் காணப்படுகின்றன என்று ஆளும் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்பதற்காக, சர்வதேச நாணய நிதியத்தை நாடினால் அது நீண்டகாலப் பிரச்னையை ஏற்படுத்தும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"குறுகிய கால பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண அரசு சர்வதேச நாணய நிதியத்தை நாடினால் அது நீண்டகாலப் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள் அரசை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் காணப்படும்.



இந்த ஆபத்தான நிலைமையை உணர்ந்து அரசு செயற்பட வேண்டும்" - என்றார். (இ)

# நீதி, சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சுகளின் நடமாடும் சேவை!

கொழும்பு, டிசெ. 30

நீதி அமைச்சு மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களால் விசேட நடமாடும் சேவையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கும் வகையில் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது

அதற்கமைய, வடமாகாணத்தை அடிப்படையாகக் கொண்டு, எதிர்வரும் ஜனவரி 28 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இந்நிகழ்வில், பொதுமக்களைப் பாதிக்கும் சட்டங்கள் தொடர்பில் மக்களுக்கு விளக்கமளிக்கப் படவுள்ளதுடன், நல்லிணக்கம் தொடர்பான விழிப்புணர்வும் ஏற்படுத்தப்படவுள்ளது.

போதைப்பொருள் பாவனை, காணிப்பிரச்னைகள் தொடர்பிலும் இந்த நடமாடும் சேவையினூடாக ஆலோசனை வசதிகள் வழங்கப்படும் அதேவேளை வேலைவாய்ப்பைப் பெறுதல் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கையும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)



# அபிவிருத்தி செய்வதற்கு எங்களிடம் நிதி இல்லை

## கைவிரிக்கிறார் அமைச்சர் டக்ளஸ்

கிளிநொச்சி, டிசெ. 30

எங்களை அபிவிருத்தி செய்வதற்கு எங்களிடம் நிதி வசதிகள் இல்லை. வெளிநாடுகள் வரும்போது நாட்டுக்கும் மக்களுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் யார் வந்தாலும் நாங்கள் வரவேற்போம் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கிளிநொச்சி இரணைமடு குளத்தின் கீழுள்ள விவசாயிகளின் பிரச்னை மற்றும் பல்வேறு பட்ட மாவட்டத்தின் பிரச்னைகள்தொடர்பில்நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் கலந் துரையாடல் ஒன்று நடைபெற்றது.

இந்த கலந்துரையாடலில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடு குளத்தின் கீழ் உள்ள விவசாயிகள் எதிர் கொள்ளும் பிரச்னை தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. குறிப்பாக உழவர் சந்தை அவசியம் தேவை என்பதை வலியுறுத்தி இருந்தனர். அதனை நடைமுறைப் படுத்து வதற்கும் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டது - என்றார்.

கிளிநொச்சி கௌதாரி முனை பிரதேசத்தில் இந்திய நிறுவனம் ஒன்றுக்கு காற்றாலை மின் உற்பத்தி நிலையங்களை அமைப்பதற்குரிய காணி வழங்குவது தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு அமைச்சர் பதிலளிக்கையில்-

யாருக்கும் அவ்வாறு காணிகள் வழங்கப்படவில்லை. எங்களை அபிவிருத்தி செய்வதற்கு நிதி வசதிகள் இல்லை. வெளிநாடுகள் வரும்போது நாட்டுக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலும் மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலும் யார் வந்தாலும் நாங்கள் வரவேற்போம்-என்றார். (அ)

# சஜித் பிரேமதாஸவே ஜனாதிபதி வேட்பாளர்

## ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு




**கொழும்பு, டிசெ. 30**

**"சஜித் பிரேமதாஸவே அடுத்த ஜனாதிபதி வேட்பாளர். கட்சியின் முடிவு இதுவே. 2015 இல் செய்ததவறை மீண்டும் செய்யமாட்டோம்." - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.**

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது, அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்திக்குள் எழுவர் தயாராக உள்ளனர் என வெளியாகும் தகவல்கள் தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. மேலும் கூறியவை வருமாறு:-

ஐக்கிய மக்கள் சக்தியின் பயணம் தனித்துவமிக்கது. ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் பலருக்கு எதிர்ப் பார்ப்புகள் இருக்கலாம். ஆனால் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் சஜித் என்பதே கட்சியின் தற்போதைய முடிவு. உத்தியோகப்பூர்வமாக அறிவிக்காவிட்டாலும்கூட அந்த நிலைப்பாட்டில்தான் கட்சி உள்ளது. எமது கட்சி தலைவரை அரச தலைவராக்குவதே எதிர்ப்பார்ப்பு.

ஏனெனில் 2015 இல் எடுத்த முடிவால் நாடும், கட்சியும் நாசமானது. அந்த தவறை மீண்டும் செய்யமாட்டோம்- என்றார். (அ)

# ஆசிரியர்கள், அதிபர்களுக்கு ஜனவரி முதல் சம்பள உயர்வு

கொழும்பு, டிசெ. 30

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கு அதிகரிக்கப்பட்ட சம்பளத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கல்வி அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதன்படி, ஜனவரி மாதம் முதல் அதிகரிக்கப்பட்ட சம்பளம் அவர்களுக்கு வழங்கப்படும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

சம்பள உயர்வுக்கான நடவடிக்கைகள் சம்பளம் மற்றும் ஊதிய ஆணைக்குழு உள்ளிட்ட சம்பந்தப்பட்ட நிறுவனங்களால் தயாரிக்கப்பட்டு வருவதாக கல்வி அமைச்சின் செயலாளரான பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்தார்.

# சீனாவுடன் மேற்கொண்ட நாணய மாற்று ஒப்பந்தமே அந்நிய செலாவணி கையிருப்பு உயர்வுக்கு காரணம்

கொழும்பு, டிசெ. 30

சீனாவுடனான நாணய பரிமாற்ற ஒப்பந்தம் இலங்கையின் அந்நிய செலாவணி கையிருப்பை சுமார் 3.1 பில்லியன் டொலர்களாக உயர்த்த உதவியுள்ளது என சர்வதேச ஊடகம் ஒன்று செய்தி வெளியிட் டுள்ளது.

சீன மக்கள் வங்கியுடன் 1.5 பில்லியன் டொலர் நாணய பரிமாற்றம் இறுதி செய்யப்பட்ட பின்னர் கையிருப்பு அதிகரிக்கப்பட்டது என ஏஜென்சியை மேற்கோளிட்டு செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் நாணய பரிமாற்றம் யுவானில் இடம்பெற்றதாகவும் தேவைப்பட்டால் அதை டொலர்களாக மாற்றலாம் என்றும் அறிக்கையிட்டுள்ளது.

நாட்டின் கையிருப்பு சுமார் 3.1 பில்லியன் டொலர்களாக உயர்ந்துள்ளதாகவும், ஆண்டு இறுதி வரை அந்த அளவில் பேணப்படும் என்றும் நேற்று புதன்கிழமை டுவிட்டரில் மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் அறிவித்திருந்தார்.

இந்நிலையில் வெளிநாட்டு ஆதரவை உறுதிப்படுத்தியுள்ள இலங்கை மத்திய வங்கி, இருப்பினும் சீனாவுடனான நாணய பரிமாற்ற ஒப்பந்தம் குறித்து எந்த தகவலையும் வெளியிடவில்லை என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் மற்றும் நிலக்கரி மின் உற்பத்தி நிலையம் உள்ளிட்ட பல்வேறு உள்கட்டமைப்பு திட்டங்களுக்காக 5 பில்லியன் டொலர்களுக்கு மேல் கடனாக வழங்கிய சீனா இலங்கையின் மிகப்பெரிய இறக்குமதி வருமான ஆதாரமாக உள்ளது. (அ)

# கிளிநொச்சியில் செயலிழந்த நிலையில் துப்பாக்கிகள், வெடிபொருட்கள் சிக்கின!



கிளிநொச்சி, டிசெ. 30

கிளிநொச்சி-குமாரசாமிபுரம் பகுதியில் செயலிழந்த நிலையில் துப்பாக்கிகள் உள்ளிட்ட வெடிபொருட்கள் அடையாளம் காணப்பட்டு மீட்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குமாரசாமிபுரம் பகுதியில் உள்ள ஆரம்பப் பிரிவு பாடசாலையின் பின்பகுதியில் உள்ள காணியிலேயே இவ்வாறு பெருமளவான ஆயுதங்களும், வெடிபொருட்களும் மீட்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக குறித்த வெடிபொருட்கள் தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

இந்த தகவலுக்கு அமைவாக தர்மபுரம் பொலிஸார் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் அனுமதி பெற்று நேற்று அகழ்வுப் பணிகளை ஆரம்பித்தனர்.

பொலிஸார், விசேட அதிரடிப்படையினர் மற்றும் பிரதேசத்துக்குப் பொறுப்பான இராணுவத்தினர் இணைந்து குறித்த அகழ்வு பணிகளை முன்னெடுத்தனர்.

இதன்போது 12.7 ரக துப்பாக்கி - 01, 12.7 ரக துப்பாக்கி ஸ்ரான்ட் - 02, ஆர் பி.ஜி துப்பாக்கி - 03, ரி 57 ரக துப்பாக்கி - 06, ரி 81 ரக துப்பாக்கி - 03, ஆர் பி ஜி செல் - 10, இயக்க தாமத கடத்திகள் - 11, அணைக்கட்டு தகர்க்கும் ஆயுதம் - 05, எல் எம் ஜி ரவைகூடு - 09, 12.7 துப்பாக்கி கூடு - 01, எம் பி எம் ஜி கூடு - 01, 12.7 ரவை செயின் - 08 ஆகியன மீட்கப்பட்டன.

இதன்போது மீட்கப்பட்ட துப்பாக்கிகள் மற்றும் வெடிபொருட்கள் ஆகியன துருப்பிடித்துக் காணப்படுவதாகவும், அவை செயல்திறன் உள்ளவையா என்பது தொடர்பில் ஆய்வு செய்யப்பட்டு, நீதிமன்றின் உத்தரவுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் கூறினர்.

குறித்த வெடிபொருட்கள் மீட்கப்படும் தனியார் காணியில் விடுதலைப்புலிகளின் முகாம் காணப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புதியதொரு அரசியல் கூட்டணி உருவாக்குவதில் திலகர் தீவிரம்




கொழும்பு, டிசெ. 30

மலையக அரசியலை மையப்படுத்தி - தேசிய அரசியலையும் இலக்கு வைத்து புதியதொரு கூட்டணியை உருவாக்குவது தொடர்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் திலகராஜ் தீவிர கவனம் செலுத்தியுள்ளாரென அவருக்கு நெருக்கமான வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

இதன் ஆரம்பக்கட்ட நகர்வாகவே 'மலையக அரசியல் அரங்கம்' - எனும் அமைப்பை உருவாக்கியுள்ளார் எனவும், தற்போது ஆசிரியர்கள், இளைஞர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் என பலதரப்பு சந்திப்புகளை நடத்தி வருகிறார்.

இதில் சிலரிடம் மட்டும் தனது அரசியல் பயணம் குறித்து பேசி வருவதுடன், ஏனைய தரப்பிடம் சிவில் சமூக செயல்பாடுகள் குறித்து மட்டும் பேசி வருவதாக தெரிய வருகிறது.

எவ்வாறாயினும், தேசிய தொழிலாளர் சங்கத்துடன் இணைந்து பயணிப்பதற்கான வாய்ப்புக்கள் குறித்தும் ஆராய்ந்த வருவதாக தெரிய வருகிறது.

எனினும், இந்த முயற்சிகளுக்கு தேசிய தொழிலாளர் சங்க செயற்பாளர் மத்தியில் கடுமையான எதிர்ப்புக்களும் ஏற்பட்டுள்ளன.

எனினும், திலகராஜ் போன்ற படித்த சமூகம் மலையக அரசியலில் அங்கம் வகிப்பது முக்கியமானது என அவருக்கு நெருக்கமான தரப்புக்கள் எதிர்பார்த்துள்ளன.

# தமிழ் அரசியல்வாதிகளால் சலிப்படையும் தமிழ் மக்கள்

நா.யோகேந்திரநாதன்




அண்மையில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கான ஒன்றுகூடல் நிகழ்வு கொழும்பில் இடம்பெற்றபோது அதன் தலைவர் மனோ கணேசன் வடக்கிலும், கிழக்கிலும் மலையகத்திலும் செயற்படும் தமிழ் அரசியல்வாதிகளையிட்டு தனக்கு சலிப்பு ஏற்படுகிறதெனவும் நீண்ட நாள் இந்தப் பரப்பில் இருக்கத் தன் மனம் விரும்ப மறுக்கிறதெனவும் தெரிவித்திருந்தார்.

இலங்கையில் போர் முனைப்புப் பெற்றிருந்த நாட்களில் தலைநகரில் இருந்தே தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்டுவந்த அநீதிகளுக்காக ஓங்கிக் குரல் கொடுத்து வந்தவர் மனோ கணேசன் என்பதை மறந்துவிடமுடியாது. ஏற்கனவே அவ்வாறான துணிச்சலான பணியை மேற்கொண்டு வந்த குமார் பொன்னம்பலம் இனந்தெரியாதவர்களால் படுகொலை செய்யப்பட்டும்கூட உயிரச்சத்தையும் பொருட்படுத்தாமல் தமிழ் மக்களின் நியாயங்களைச் சிங்கள மக்கள் மத்தியிலும் சர்வதேச அரங்கிலும் ஒலித்து வந்தவர் மனோ கணேசன்.

இவ்வாறான நெருக்கடி மேல் நெருக்கடிகள் மத்தியிலும் துணிவுடனும் நேர்மையுடனும் செயற்பட்டு வந்த அவர் தற்சமயம் தமிழர்களின் தலைவர்களின் நடத்தைகள் தன்னைச் சலிப்படைய வைக்கிறது எனக் குறிப்பிட்டுள்ளமை பலரையும் ஆச்சரியப்பட வைத்துள்ளது. ஆனாலும் தனது சலிப்புக்கு முன்வைத்த காரணங்கள் அலட்சியப்படுத்தி விடக் கூடியவை அல்ல என்பது முக்கியமாகும்.

அதேவேளையில் அவர் குறிப்பிட்ட காரணங்கள் மட்டுமின்றி மேலதிகமான காரணங்களாலும் அவருக்கு ஏற்பட்ட சலிப்பு தமிழ் தலைமைகள் மீது தமிழ் மக்களுக்கும் ஏற்பட்டுள்ளது என்பதைக் கவனத்தில் எடுக்காமல்விட முடியாது.

இந்து சமுத்திரப் பிராந்திய மேலாதிக்கத்தை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கான சீனாவுக்கும் அமெரிக்கா, இந்தியா ஆகிய நாடுகளுக்குமான போட்டி கூர்மையடைந்துள்ள நிலையில் அவர்கள் இலங்கையைத் தமது தளமாகப் பிரயோகிப்பதற்கான முயற்சிகள் தீவிரமடைந்து வருகின்றன. அவ்வகையில் மூன்று தரப்பினரும் இலங்கையின் இனப்பிரச்சினையை தமது நோக்கங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் நகர்வுகள் பல முனைகளிலும் ஆரம்பித்துள்ளன.

இந்த நிலையில் தமிழ் மக்கள் இப்பிராந்திய, சர்வதேச மேலாதிக்கப் போட்டியில் வழமைபோல் பயன்படுத்தப்படும் காய்களாக உருட்டப்படப் போகின்றனரா. அல்லது இந்த நிலைமையைப் பயன்படுத்தி எமக்குச் சாதகமான சூழலை உருவாக்கப் போகிறார்களா என்பதே இப்பொழுது எழும் கேள்வியாகும். ஆனால் தமிழ் தலைமைகளிடம் அவ்வகையான முயற்சிகளை மேற்கொள்வதற்கான குறுகிய கால நீண்ட கால வேலைத்திட்டமோ அதைமுன்னெடுப்பதற்கான உறுதியோ, தந்திரோபாயமோ இருப்பதாகவோ தெரியவில்லை. குறைந்த பட்சம்ஒரு பொதுக்கொள்கையை வகுக்குமளவுக்குக் கூட தயாராயில்லை.

எந்தவொரு விடயத்திலும் கொள்கையும் தந்திரோபாயமும் முக்கியமானவையாகும். தந்திரோபாயம் இல்லாத கொள்கை இலக்கை அடையமுடியாமல் தோற்கடிக்கப்படும். அதேபோன்று கொள்கையில்லாத தந்திரோபாயம் முதலில் வெற்றி பெறுவதுபோல் தோன்றினாலும் இறுதியில் படுதோல்வியிலேயே முடியும்.

இது அரசியலில் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாகும். ஆனால் எமது தமிழ்த் தலைமைகளிடம் தெளிவான நீண்ட கால, குறுகியகால இலக்குகளைக் கொண்ட கொள்கையோ, இலக்கை அடைவதற்கான தந்திரோபாயமோ இருப்பதாகத் தெரியவில்லை.

13ஆவது திருத்தம் தமிழ் மக்கள் பிரச்னைக்கு ஒரு தீர்வு அல்ல என்றும், இதுவொரு ஆரம்பப் புள்ளி என்று ஒரு சாராரும், இது ஒற்றையாட்சியை ஏற்றுக்கொள்ளும் ஒரு திட்டமாதலால் இதை ஏற்கமுடியாதெனவும் சர்வதேச அனுசரணையுடன் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டுமெனவும் ஒவ்வொரு தரப்பினரும் ஒவ்வொரு கொள்கைகளை வாய்ப்பாடு மாதிரி ஓதி வருகின்றனர். ஆனால் இவற்றை அடைவதற்கான வழிமுறைகளை இதுவரை எவரும் முன்வைத்ததாக இல்லை.

மாறாக இந்தியா மூலமோ அமெரிக்கா மூலமோ எமது பிரச்னைகளுக்குத் தீர்வு காணமுடியும் என்பதைக் கூறித் தமிழ் மக்களை காலங்காலமாக ஏமாற்றி வருகின்றனர். அதுமட்டுமின்றி இவர்களிடம் எப்படியான தீர்வு வேண்டுமெனக் கோரும் ஒருமைப்பட்ட உறுதியான, நேர்மையான தீர்வுத் திட்டமோ கிடையாது.

அமெரிக்க செனட்டில் தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு என்ற தீர்மானம் முன்வைக்கப்பட்டதையடுத்து அமெரிக்கா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பேச்சுகளை நடத்த அழைத்திருந்தது. அதன்படி பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் வேறு இரு சட்டத்தரணிகளும் அமெரிக்கா சென்று பேச்சுகளில் கலந்து கொண்டனர். தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான செல்வம் அடைக்கலநாதனோ சித்தார்த்தனோ இக்குழுவில் இணைத்துக் கொள்ளப்படவில்லை. அப்படியானால் சுமந்திரன் தலைமையில் சென்ற சட்டத்தரணிகள் குழுவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் என நம்பமுடியுமா?

இன்னொருபுறம் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தும்படி இந்தியாவிடம் ஒன்றிணைந்த கோரிக்கையை முன்வைக்கும் முகமாக 15 தமிழ், முஸ்லிம் கட்சிகள் இணைந்து பேச்சுகளை நடத்தி வருகின்றன. இதில் மாவை சேனாதிராஜாவோ கஜேந்திரகுமார் பொன்னம்பலமோ இணைந்துக் கொள்ளவில்லை. தமிழ், முஸ்லிம் கட்சிகள் ஒன்றிணையும் சந்தர்ப்பத்திலும்கூட அதில் தமிழரசுக் கட்சியும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் இணைந்து கொள்ளவில்லை. இந்த இரண்டு சம்பவங்கள் மூலமும் தமிழ்த் தலைமைகள் ஒன்றுபட்டு ஒரே குரலில் தமது கோரிக்கைகளை அமெரிக்காவிடமோ, இந்தியாவிடமோ முன் வைக்கும் வாய்ப்புகள்நிராகரிக்கப்பட்டு விட்டது.

எனவேதான் தமிழ் தலைமைகளின் நடவடிக்கைகள் தன்னைச் சலிப்படைய வைக்கின்றன என மனோ கணேசன் கருத்து வெளியிட்டுள்ளார். எமது கோரிக்கைகளை ஒன்றிணைந்து வைக்கத் தயாரற்ற நிலையில் தமிழ் மக்களுக்கும் சலிப்பு ஏற்படுவதைத் தவிர்க்க முடியுமா?

இப்படியான ஒரு இழுபறி நிலையில் கடந்த 21.12.2021 அன்று கொழும்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் தமிழ்ப் பேசும் மக்களின் கட்சிகளின் நிலைப்பாட்டை ஒரு ஆவணமாகத் தயாரித்து இந்தியாவிடம் கையளிக்குமுகமாக ஒன்றுகூடல் இடம்பெற்றது. இதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தவிர்ந்த ஏனைய தமிழ், மலையக. முஸ்லிம் கட்சிகள் அனைத்தும் கலந்து கொண்டன. இதில் தமிழரசுக் கட்சியின் சார்பில் சுமந்திரன், மாவை சேனாதிராஜா ஆகியோரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

அங்கு ஏற்கனவே தமிழ் பேசும் கட்சிகளால் தயாரிக்கப்பட்டிருந்த 5 பக்க ஆவணம் கையளிக்கப்பட்டது. எனினும் இதைத் தமிழரசுக் கட்சியினர் ஏற்க மறுத்து பிறிதொரு ஆவணத்தை முன்வைத்தனர். இந்நிலையில் நீண்ட விவாதங்களின் பின்பு தமிழரசுக் கட்சி சமர்ப்பித்த ஆவணத்தில் முன்னைய ஆவணத்தின் சில பகுதிகள் இணைக்கப்படுவதற்கான இணக்கம் காணப்பட்டது. இந்நிலையில் சுமந்திரன், மனோகணேசன், செல்வம் அடைக்கலநாதன், நிசாம் காரியப்பர், சுரேந்திரன், ஸ்ரீகாந்தா, மாவை சேனாதிராசா ஆகியோர் ஒன்றிணைந்து கலந்துரையாடிப் புதிய நகல் வடிவத்தைத் தயாரித்தனர்.

இதில் தமிழ் மக்களின் முக்கிய எட்டு பிரச்னைகளும் ஒன்றுகூடலில் இணக்கம் காணப்பட்ட விடயங்களும் இணைக்கப்பட்டுப் புதிய ஆவணம் தயாரிக்கும் பொறுப்பு சுமந்திரனிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆவணம் தயாரிக்கப்பட்ட பின்பு அது எல்லாக் கட்சிகளிடமும் ஒப்படைக்கப்பட்டு கையொப்பம் பெறப்பட்டுப் பின்பு இந்தியப் பிரதமருக்கு அனுப்பி வைக்கப்படுமெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மனோ கணேசன் மட்டுமின்றி தமிழ் மக்களும் தமிழ்த் தலைமைகளின் செயற்பாட்டில் சலிப்படைந்துள்ள நிலையில் அனைத்துத் தமிழ், முஸ்லிம், மலையக கட்சிகளும் ஒன்றிணைந்து ஒரு பொது இணக்கப்பாட்டுக்கு வந்தது ஒரு முன்னேற்றம் என்றே சொல்லவேண்டும். அதேவேளையில் இந்தப் பொது உடன்பாடு இந்தியப் பிரதமரிடம் சமர்ப்பிக்க மட்டும் தானா அல்லது இது ஒரு பொதுக் கொள்கையாக ஏற்றுக் கொள்ளப்பட்டு அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமா என்ற கேள்வி எழத்தான் செய்கிறது.

ஒன்றிணைந்த செயற்பாட்டில் இரா. சம்பந்தன், சுமந்திரன், கஜேந்திரகுமார் ஆகியோர் மேற்கொண்டுவரும் நிராகரிப்புப் போக்குகள் இத்தகைய நம்பிக்கையீனத்தை ஏற்படுத்துவதில்ஆச்சரியமில்லை.

ஏற்கனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுகளை நடத்த சீனா மேற்கொண்ட முயற்சிகள் நிராகரிக்கப்பட்டமை, நரேந்திர மோடி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்புக்கு விடுக்கப்பட்ட அழைப்பு ஒத்தி வைக்கப்பட்டமை போன்ற விடயங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேறு ஏதோவொரு உள்நோக்கத்துடன் செயற்படுகிறதா என்ற சந்தேகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

சர்வதேச முரண்பாடுகளும் பிராந்திய சூழலும் தமிழ் மக்களுக்குச் சாதகமான ஒரு வாய்ப்பை ஏற்படுத்தினாலும் தமிழ் தலைமைகள் யாருக்கும் விலைபோகாமல் ஒன்றிணைந்து, உறுதியுடன் முன்செல்வதன் மூலமே அவை எமக்குப் பயன்படும் விதத்தில் அமைய முடியும். அதற்கான அறிகுறிகள் வெகு குறைவாகவே காணப்படும் நிலையில் தமிழ் மக்கள் சலிப்படைவதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை.

- அருவி



# 2021 இல் சாதித்தது என்ன?

**வேல்ஸ் இல் இருந்து அருஸ்**

வழமைபோலவே தமிழ் மக்களின் ஏக்கங்கள் மற்றும் எதிர்பார்ப்புக்கள் எல்லாவற்றையும் தாண்டி, இந்த வருடமும் கடந்து போயுள்ளது. ஈழத்தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு, அங்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதி தேடுதல், தாயக மக்களின் மேம்பாடு மற்றும் அங்குள்ள மக்களினதும், தாயக பிரதேசங்களினதும் பாதுகாப்பு என்பன தொடர்பில் கடந்த ஒரு வருடத்தில் புலம்பெயர் தமிழ் சமூகம் என்ன நகர்வுகளை மேற்கொண்டது என்பது தொடர்பில் பார்ப்பதன் மூலம் நாம் எமது அடுத்த வருடத்திற்கான செயற்பாடுகளை செழுமைப்படுத்த முடியும்.

கடந்து செல்லும் இந்த வருடத்தில் மார்ச் மாதம் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் கொண்டுவரப்பட்ட 46/1 என்ற தீர்மானம் என்பது மேற்குலகத்தின் அனுசரணையுடன் அவர்களினால் திரட்டப்பட்ட நாடுகளின் ஆதரவுகளுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அதில் இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் ஆதாரங்களைத் திரட்டுதல் மற்றும் அவற்றை பாதுகாத்தல் தொடர்பான பணிகளை முன்னெடுப்பது என்பது தொடர்பான விவகாரம் காத்திரமாக இடம்பெற்றுள்ளதுடன், அதற்கான நடவடிக்கையையும் அவர்கள் மேற்கொள்வதற்கான செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்த தீர்மானத்தில் 13 ஆவது திருத்தச்சட்டம் என்ற அரசியல் தீர்வை இந்தியா புகுத்தியுள்ளதுடன், அதனை அமெரிக்கா தலைமையிலான மேற்குலகம் ஏற்றுக்கொள்ளவும் செய்துள்ளது.

புலத்தில் இடம்பெற்ற இந்த விவகாரங்களில் புலம்பெயர் அமைப்புக்கள் மற்றும் செயற்பாட்டாளர்களின் செயற்பாடுகள் எவ்வாறு இருந்தது என்றால், அவர்களுடன் இணைந்து பணியாற்றும் நிலையை நாம் எட்டவில்லை என்பதே உண்மையானது.

விமர்சனங்களை முன்வைத்துவிட்டு கடந்து சென்றுள்ளோம். கிடைக்கும் சந்தர்ப்பங்களையும் தவறவிடுவதிலும் அவர்கள் சிறிதும் கவலை கொள்ளவில்லை.

எனினும் இந்தியாவின் அழுத்தத்துடன் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி, அதில் உள்ள சொற்ப அதிகாரங்களை யாவது தமிழ் மக்கள் பெறுவதன் மூலம், எமது தாயகத்தின் இருப்பை உறுதிப்படுத்தத் தேவையான சிறிய பணியை யாவது முன்னெடுப்பதற்கான வேலைத் திட்டங்களை தாயகத்தில் உள்ள கட்சிகள் ஆரம்பித்துள்ளன.

அதில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளதுடன், வரலாற்றில் முதல் தடவையாக மலையகம், மேல்மாகாணம், வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த தமிழ் கட்சிகள், முஸ்லீம் கட்சிகள் என்பன ஒன்று சேர்ந்துள்ளதானது, கடந்து சென்ற ஆண்டின் ஒரு முக்கிய நிகழ்வாகவே பார்க்கப்பட வேண்டும். ஆனால் அதில் புலம்பெயர் அமைப்புக்களின் பங்களிப்பு என்பது குறிப்பிடும்படியாக இல்லை என்பதுடன், அதனைச் சீர்குலைக்கும் பணிகளை புலம்பெயர் சில அமைப்புக்களும், ஊடகங்களும் செய்வது என்பது 2021 இல் நாம் சந்தித்த துன்பமாகும்.

**இலங்கை தொடர்பில் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள பூகோள மாற்றத்தை பயன்படுத்திக் கொள்வதிலும் புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் வழமை போல காலத்தை தவற விட்டதாகவே இந்த ஆண்டும் கடந்து சென்றுள்ளது.**

இங்கிலாந்தில் தைத்திருநாளை மரபுரிமை வாரம் எனப் பிரகடனப்படுத்தும் நடவடிக்கைகளில் புலம்பெயர் தேசம் காத்திரமான நகர்வை மேற்கொண்டிருந்தாலும், அது ஈழத் தமிழர்களின் அரசியலில் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தப்போவதில்லை என்பதை நாம் ஏற்றுக்கொண்டாக வேண்டும்.

இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் என உலகம் எங்கும் பரந்துவாழும் தமிழ் மக்களுக்கான அங்கீகாரம் அது. எமது மக்களின் அரசியலில் அது காத்திரமானதல்ல.

கனடாவில் கொண்டுவரப்பட்ட இனப்படுகொலை கற்கைவாரம் என் பது கனடாவில் வாழும் தமிழ் மக்களினாலும், அமைப்புக்களினாலும், அந்த நாட்டின் அரசில் அங்கம்வகிக்கும் அரசியல் செயற்பாட்டாளர்களினாலும் மேற்கொள்ளப்பட்ட முயற்சியின் பலனாகும். அது ஒரு காத்திரமான நிகழ்வாகவே இந்த ஆண்டில் பதிவு செய்யப்பட வேண்டும்.

அதற்கு அப்பால், 2021 ஆம் ஆண்டு கடந்து சென்ற நினைவு நாட்களானாலும், தமிழ் இனத்தின் முக்கியமான நிகழ்வுகளானாலும், பல அமைப்புக்கள் வழமைபோல அறிக்கைகளை வெளியிட்டன. புலம்பெயர் தேசத்தில் இயங்கும் அமைப்புக்கள் அனுசரணை வழங்கும் அந்த நாடுகளின் அரசியல் தலைவர்கள் வழமைபோல அறிக்கைகளையும், சமூகவலைத்தளங்களிலும் தமது பதிவுகளை வெளியிட்டனர். அதற்கு அப்பால் இலங்கை அரசு எந்த விதமான அழுத்தங்களையும் அவர்களிடம் இருந்து எதிர்கொள்ளவில்லை.

எமது போராட்டத்தைத் தற்போதும் உயிர்ப்புள்ளதாக வைத்திருக்கும், காணாமல் போனோர் விவகாரம் தொடர்பில் தாயகத்தில் தொடர் போராட்டங்கள் இடம் பெற்று வருகின்றன. ஆனால் அது தொடர்பில் புலம்பெயர் தேசத்தில் எந்த விதமான காத்திரமான செயற்பாடுகளையும் இந்த வருடத்தில் காணமுடியவில்லை.

அங்கு இருக்கும் அமைப்புக்களை ஒருங்கிணைத்து அதனை அனைத்துலக மட்டத்திற்கு கொண்டு செல்லும் பாரிய பொறுப்பு ஒன்று புலம்பெயர் தேசங்களில் வழும் தமிழ் மக்களிடம் உண்டு. ஆனால் அதனை நாம் மேற்கொள்ளவில்லை அல்லது அதில் எந்தவிதமான முன்னேற்றங்களும் எட்டப்படவில்லை என்பது வருத்தமானதே.

இலங்கை தொடர்பில் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள பூகோள மாற்றத்தை பயன்படுத்திக் கொள்வதிலும் புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் வழமைபோல காலத்தை தவறவிட்டதாகவே இந்த ஆண்டும் கடந்து சென்றுள்ளது.

ஒரு சீரான மற்றும் தெளிவான வெளிவிவகாரக் கொள்கைகள் அற்ற நிலையில் ஒவ்வொரு தேசங்களிலும் உள்ள அமைப்புக்களும், அதன் தலைவர்களும் தாம் வாழும் நாட்டில் தமது அமைப்புக்களையும், தமது நலன்களையும் பாதுகாப்பதற்காக வெளியிடப்பட்ட அறிக்கைகள், விமர்சனங்கள் என்பன தமிழ் இனம் ஒரு தோல்விகண்ட வெளிவிகாரக் கொள்கையுடன் பயணிப்பதையே எடுத்துக் காண்பித்துள்ளது.

மிகப்பெரும் தேசங்கள் கூட எல்லா நாடுகளையும் அனுசரித்துப் பகைவர்களைத் தேடாது நண்பர்களைத் தேடி வரும் இந்த காலகட்டத்தில் எமது அமைப்புக்களும், செயற்பாட்டாளர்களும் தமிழ் இனத்திற்கு எந்தவித நன்மையும் செய்யாத நாடுகளுக்காக பிராந்திய வல்லரசுகளை எதிர்க்கத் துணிவது என்பது தமிழினத்திற்கான அழிவை அவர்களே தேடித்தருவதாகவே இந்த ஆண்டில் நாம் பார்த்து நின்றோம்.

விடுதலைப்போரின் ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்டபோது, அடுத்த தலைமுறை அதனை நகர்த்த வேண்டும் என்ற தேசியத் தலைவரின் சிந்தனைக்கு செயல்வடிவம் கொடுப்பதில் ஏற்பட்ட தடைகளை ஓரளவு தணித்த வருடமாக நாம் இந்த வருடத்தை குறித்துக் கொள்ள முடியும்.

காத்திரமான செயற்றிட்டங்களை முன்னெடுப்பதில் இளைய சமூகம் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளதை நாம் இந்த வருடத்தில் அதிகம் கணக்கூடியதாக இருப்பதே எமக்கு ஆறுதல் தரும் விடயமாகும்.

அதற்கு அப்பால் புலம்பெயர் அமைப்புக்கள் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும் என்ற தமிழ் மக்களின் ஆவல் என்பது இந்த வருடத்திலும் கனவாகவே கடந்து போயுள்ளது. அது மட்டுமல்லாது, புலம்பெயர் தேசங்களில் உள்ள தமிழ் அரசியல்வாதிகளினாலும் தமிழ் மக்கள் தாயகத்தில் எதிர்கொள்ளும் பிரச்னைகள் தொடர்பில் அனைத்துலகத்தின் கவனத்தை கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளில் எதனையும் முன்நகர்த்த முடியவில்லை என்பதும் வேதனையானது.

இந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் எமக்கு வேதனையைத் தருவதாக இருந்தாலும், அதனை உள்வாங்குவதன் மூலம் தான் அடுத்த வருடத்தில் நாம் என்ன நகர்வுகளை முன்னெடுக்க வேண்டும் என்ற தெளிவைப் பெறமுடியும். உண்மை என்பது கசப்பாக இருந்தாலும் அதனை ஏற்றுக்கொள்வதன் மூலம் தான் நாம் காலத்தை சரியாக பயன்படுத்திக் கொள்ள முடியும். ■



# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வி னாத்தாள்

நேரம் : 1 மணித்தியாலம்

கல்வி tv CHANNEL

9. பின்வருவனவற்றின் இளமைப் பெயரை எழுதுக.

(i) பயிர் : ........................................ (ii) வேம்பு : ........................................

10. 'நேர்பட ஒழுகு' என்னும் ஆத்திசூடியின் பொருளை எழுதுக.


..........................................................................................


11. தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்களுக்கு உரிய **தமிழ்ச்** சொற்களை எழுதுக.

(i) Lightening : ........................................

(ii) History : ........................................

12. தரப்பட்டுள்ள ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை **ஆங்கில** எழுத்துக்களிலேயே எழுதுக.

(i)  ........................................

(ii)  ........................................

13. தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.

(i) is / That / car / my : ........................................

(ii) am / to / I / school / going : ........................................

14. 'விதுஹுல்பதி' என்ற சிங்களச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

..........................................................................................


15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தினைத் **தமிழில்** எழுதுக.

சோறு சாப்பிடுங்கள் : ........................................

16. கட்டத்தில் உள்ள இலக்கங்களைக் கொண்டு ஆக்கக்கூடிய மிகச் சிறிய எண்ணை எழுதுக.

| | |
|---|---|
| 7 | 0 |
| 5 | 3 |

: ........................................

17. 


A, B, C, D ஆகிய நான்கு கோல்கள் உள்ள எண்சட்டம் அருகே தரப்பட்டுள்ளது.
எந்தக் கோலில் உள்ள மணிகளினால் வகைகுறிக்கப்படும் பெறுமானம் 20 ஆகும்? : ........................................

18. கோலத்தின் வெற்றிடங்களில் வரவேண்டிய இரண்டு எண்களையும் எழுதுக.

19, 22, .........., 28, ..........

19. தரப்பட்டுள்ள எண்களை **ஏறுவரிசையில்** எழுதுக.

2470, 4756, 4125, 2765 : ........................................

20. விற்பனைக்காகக் கொண்டுவரப்பட்ட ஒரு தொகைத் தோடம்பழங்களில் $\frac{3}{4}$ எஞ்சியிருந்தது. எஞ்சியிருந்த தோடம்பழங்களின் எண்ணிக்கை 57 எனின், விற்பனைக்காகக் கொண்டுவரப்பட்ட தோடம்பழங்கள் எத்தனை?

: ........................................

### விடைகள்

9. (i) நாற்று
(ii) கன்று

10. ஒழுக்கம் தவறாமல் நேர்வழியில் நட

11. (i) மின்னல்
(ii) வரலாறு

12. (i) Tree / tree / TREE
(ii) Lion / lion / LION

13. (i) That is my car
(ii) I am going to school

14. அதிபர்

15. பத்கன்ன

16. 3057

17. C

18. 25, 31

19. 2470, 2765, 4125, 4756

20. 76

21. (ஏதேனும் இரண்டு பகுதிகளுக்கு நிறந்தீட்டியிருப்பின் புள்ளி வழங்குக.)

ஈழநாடு

# இலங்கையில் முப்பது வீதமானோருக்கு மூவேளை உணவு கிடைப்பதில் சிக்கல்!

## ஆளும் தரப்பு எம்.பி. வீரசுமண வீரசிங்க விசனம்



**கொழும்பு, டிசெ. 30**
**“நாட்டில் வாழும் சனத்தொகையில் 30 வீதமானோருக்கு மூவேளை உணவையும் முறையாக உண்ணமுடியாத விதத்தில் கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது.”**

- இவ்வாறு அரச பங்காளிக் கட்சியான இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது. இது தொடர்பில் கருத்து வெளியிட்ட கம்யூனிஸ்ட் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வீரசுமண வீரசிங்க கூறியவை வருமாறு:-

“எமது நாட்டு வெளிவிவகாரக் கொள்கையானது ஒரு திசையை நோக்கி இழுத்துச் செல்லப்படுகின்றது. இது பயங்கரமான நிலைமை ஏற்பட வழிவகுக்கும்.

அதேபோல் நாளொன்றுக்கு இலட்சம் ரூபாவைச் செலவளிப்பவர்களுக்கு, இந்த நாட்டில் ஒருவேளை உணவைக் கூட உண்பதற்கு கஷ்டப்படுபவர்களும் வாழ்கின்றனர் என்பது தெரிந்திருக்குமா எனத் தெரியவில்லை. இதுவும் பெரும் பிரச்னையாகும்.

ஏனெனில் இந்நாட்டில் ஐந்து குழந்தைகளில் ஒரு குழந்தை மந்த போசனை பிரச்சினையை எதிர்கொள்கின்றது. அத்துடன், 30 வீதமான மக்களுக்கு மூவேளை உணவை முறையாக உண்ண முடியாத நெருக்கடியான பொருளாதார நிலை உருவாகியுள்ளது. இந்த நிலைமை குறித்து நாம் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

எமது ஆட்சிகாலத்தில் இது வரை நாம் முன்னெடுத்த திட்டங்கள் தொடர்பில் 2022இல் மீளாய்வு செய்யப்பட வேண்டும். சுய விமர்சனத்துக்கு உள்ளாக வேண்டும். அவ்வாறு சுய விமர்சனம் இல்லையேல் முன்னோக்கிச் செல்ல முடியாது”

- என்றார். (இ)

# விபத்தில் குழந்தை மரணம்

அக்கரைப்பற்று, டிசெ. 30

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அட்டாளைச்சேனை பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இரண்டு வயது குழந்தை பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.

அக்கரைப்பற்று - கல்முனை பிரதான வீதியின் அட்டாளைச்சேனைப் பகுதியில் வீதியைக் கடக்க முற்பட்ட வேளையிலேயே குறித்த குழந்தை கப் வண்டியில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த குழந்தை அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது. உயிரிழந்த குழந்தையின் சடலம் அக்கரைப்பற்று வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

கப் வாகன சாரதியின் கவனக்குறைவால் விபத்து இடம்பெற்றுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். (இ)

# இரண்டு கைக்குண்டுகள் மீட்பு!

திருகோணமலை, டிசெ. 30

திருகோணமலை மாவட்டம், கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இரண்டு கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



கந்தளாய் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை யடுத்து சேனநாயக்க மாவத்தையில் உள்ள நெல் களஞ்சியசாலை பகுதியில் இரண்டு வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டுகளைக் கண்டெடுத்துள்ளனர்.

நீதிமன்ற உத்தரவின் பேரில் விசேட அதிரடிப் படையின் வெடிகுண்டு செயலிழப்புப் பிரிவினரால் குறித்த கைக்குண்டுகள் செயலிழக்கச் செய்யப்படும் என்று கந்தளாய் பொலிஸார் தெரிவித்தனர். (இ)

# அந்நியச் செலாவணி கையிருப்பு அதிகரிப்பு

## மத்திய வங்கி ஆளுநர் “ருவிட்”



கொழும்பு, டிசெ. 30

இலங்கையின் அந்நியச் செலாவணி கையிருப்பு 3.1 பில்லியன் அமெரிக்க டொலர்களை அண்மித்துள்ளது என மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

தனது அதிகாரபூர்வ ருவிட்டர் பக்கத்திலேயே அவர் இந்தத் தகவலை வெளிப்படுத்தியுள்ளார்.

இவ்வாண்டு நிறைவடையும் வரை இந்தத் தொகையை தக்க வைத்துக்கொள்ள முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் அந்நியச் செலாவணி கையிருப்பு சடுதியாக வீழ்ச்சியடைந்திருந்தது. இதனால் பல பிரச்னைகள் உருவாகின என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# மூவின மக்களும் ஒன்றிணைந்து பயணிக்கும் ஆட்சிக்கு நாம் தயார்

## ஜே.வி.பி. அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 30

“ஐக்கிய இலங்கைக்குள் மூவின மக்களும் ஒன்றிணைந்து பயணிக்கும் ஆட்சியை முன்னெடுக்க நாம் தயார்.”

- இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. தெரிவித்தார்.

நாட்டின் நிகழ்கால அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடி நிலைமைகள் குறித்து மக்கள் விடுதலை முன்னணியின் நிலைப்பாட்டை ஊடகங்களிடம் முன்வைக்கும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“இதுவரை காலமாக அரசியல் நோக்கங்களுக்காக மக்கள் ஆட்சி மாற்றத்தை செய்தனர். இன்று பொருளாதார நெருக்கடி நிலையொன்று ஏற்பட்டுள்ளது. இதில் ஆட்சி செய்த இரண்டு பிரதான கட்சிகளுமே பொறுப்புக்கூற வேண்டியுள்ளது. இந்த இரண்டு கட்சிகளாலும் இனியும் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாது.



எனவே, இன்று மாற்று அணியொன்றும், மாற்றுப் பொருளாதாரத் திட்டமொன்றும் உருவாக்கப்பட வேண்டும். அதற்கான சரியான தருணம் இதுவாகும்.

மக்கள் இப்போது சரியான அரசியல் தீர்மானம் எடுக்க வேண்டும். இதுவரை காலமாக பிரதான இரண்டு கட்சிகள் உருவாக்கிய பொய்களில் ஏமாற்றப்பட்டே மக்கள் ஆட்சியை உருவாக்கியுள்ளனர். ஆனால், இன்று அந்தப் பொய்களை மக்கள் கேட்கத் தயாராக இல்லை.

இந்த நாட்டில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்துக்கும் இடையில் போர் இடம்பெற்றதே தவிர தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் அல்ல. 2005ஆம் ஆண்டில் நாம் எடுத்த சில தீர்மானங்கள் தாமதாகியிருந்தால் இந்த நாட்டில் தமிழ் - சிங்களப் போர் ஒன்று உருவாகியிருக்கும்.

நாட்டில் இன்று தமிழ் - சிங்கள - முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டிய கட்டாய தேவை உள்ளது. இன நல்லிணக்கத்தை உருவாக்கி ஆட்சியைக் கொண்டு செல்லும் மனநிலையில் இந்த ஆட்சியாளர்கள் இல்லை.

எனவேதான் சகல மக்களின் மனங்களையும் வென்றிகொண்டு ஐக்கிய இலங்கையைக் கட்டியெழுப்ப நாம் முயற்சிக்கின்றோம். அதன் மூலமாகவே நாட்டின் பொருளாதாரத்தையும் கட்டியெழுப்ப முடியும்” - என்றார். (இ)

# நியாயமற்ற ஆட்சி நடத்துகின்றது அரசு!

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு



கொழும்பு, டிசெ. 30

நியாயமற்ற முறையிலேயே அரசு தற்போது ஆட்சி செய்து வருகின்றது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக குற்றஞ்சாட்டினார்.

கொழும்பில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றும்போதே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“எரிபொருள் விலைச்சூத்திரத்தை அன்று விமர்சித்தவர்கள், இன்று அதனை வரவேற்கின்றனர். சத்தியத்தை அசத்தியமாக்கியே இந்த அரசு ஆட்சிக்கு வந்தது. அது போன்றே நாட்டையும் ஆட்சி செய்கின்றது.

கடந்த இரண்டு வருட ஆட்சியில், அரசின் நிர்வாகத் திறனைப் பார்க்கும்போது மக்களுக்காக இந்த அரசு பணியாற்றவில்லை என்பது புலனாகின்றது.

ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் குடும்ப ஆட்சியை மையப்படுத்தியே இந்த அரசு செயற்பட்டுள்ளதுடன் மக்கள் சார்பாகச் செயற்பட்டமைக்கான சான்றுகளைப் பார்க்க முடியவில்லை. நியாயமற்ற முறையிலேயே அரசு தற்போது ஆட்சி செய்து வருகின்றது” - என்றார். (இ)

ஈழநாடு






## சூடானில் தங்க சுரங்கம் இடிந்து 38 தொழிலாளர்கள் உயிரிழப்பு!

கார்டோம், டிசெ. 30

சூடானில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கைவிடப்பட்ட தங்கச் சுரங்கம் இடிந்து விழுந்ததில் 38 பேர் உயிரிழந்தனர்.

சூடான் தலைநகர் கார்டோமுக்கு தெற்கே 700 கி.மீ. தொலைவில் புஜா என்ற கிராமத்தில் அரசுக்குச் சொந்தமான தங்கச் சுரங்கம் உள்ளது. செயற்படாத இந்தச் சுரங்கம் மூடப்பட்டுள்ளது.

அந்தச் சுரங்கத்தில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த பாதுகாப்புப் படையினர் அங்கிருந்து சென்ற நிலையில் உள்ளூரைச் சேர்ந்த சுரங்கத் தொழிலாளர்கள் சுரங்கத்துக்குள் சென்றுள்ளனர்.

இதன்போதே சுரங்கம் இடிந்து விழுந்ததில் 38 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர். அவர்களில் 8 பேர் மீட்கப்பட்டு மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர் என சூடான் அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தங்கச் சுரங்கம் செயல்படாத நிலையில் இருந்தது என சூடான் மினரல் ரிசோர்சஸ் லிமிடெட் என்ற தங்கச் சுரங்க நிறுவனம் தெரிவித்துள்ளது. எனினும் சுரங்கம் எப்போது முதல் செயல்படமல் உள்ளது? என்ற தகவலை நிறுவனம் கூறவில்லை.


உலகின் பெரிய தங்க அகழ்வு நாடுகளில் ஒன்றாக சூடான் உள்ளது. 2020 ஆம் ஆண்டில் 36.6 தொன் தங்கத்தை இந்நாடு அகழ்வு செய்ததாக உத்தியோகபூர்வ தரவுகள் தெரிவிக்கின்றன.

சூடானில் இருந்து சட்டவிரோதமாக தங்கம் அகழ்ந்து கடத்தப்பட்டு வரும் சம்பவங்கள் அதிகரித்ததை அடுத்து தங்கச் சுரங்க தொழில் துறையை கடந்த இரண்டு ஆண்டுகளாக இடைக்கால அரசாங்கம் ஒழுங்குபடுத்தி வருகிறது.

சூடானின் தங்கச் சுரங்கங்களில் இடிபாடுகளில் சிக்கி அடிக்கடி உயிரிழப்புகள் பதிவாகின்றன. தங்கச் சுரங்கங்களின் பாதுகாப்பு தரநிலை உரியவாறு பேணப்படாமையே இதற்குக் காரணமாக உள்ளது. (அ)

## நிலவுக்கு மனிதனை அனுப்பும் ஜப்பானின் திட்டங்கள் தீவிரம்!

ரோக்கியோ, டிசெ. 30




ஜப்பான் தனது விண்வெளி ஆய்வுத் திட்டங்கள் தொடர் பான அட்டவணையை நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை திருத்தி அமைத்துள்ளது. 2024 ஆம் ஆண்டில் சந்திரனில் ஜப்பானியர் ஒருவரை தரையிறக்கும் நோக்குடன் புதிய திட்டங்கள் வகுக்கப்படுள்ளன.

விண்வெளித் திட்டம் மக்களுக்கு நம்பிக்கைகள் மற்றும் கனவுகளை வழங்குவதற்கான திட்டம் மட்டுமல்ல. அது நமது பொருளாதாரத்துக்கு முக்கியமான அடித்தளத்தையும் வழங்குகிறது என ஜப்பானின் விண்வெளி பயணத் திட்டத்தை இறுதி செய்யும் கூட்டத்தில் பேசிய பிரதமர் புமியோ கிஷிடா கூறினார்.

விண்வெளி வீரர்களை சந்திரனுக்குத் திருப்பி அனுப்புவதை நோக்கமாகக் கொண்ட அமெரிக்க தலைமையிலான ஆர்ட்டெமிஸ் திட்டத்தின் ஒரு பகுதியாக முதல் ஜப்பானியரை நிலவில் தரையிறக்குவதை நோக்கமாகக் கொண்டு ஜப்பான் திட்டங்களை வகுத்துள்ளது.

2024 ஆம் ஆண்டில் செவ்வாய் கிரகத்தை ஆராய்வதற்கான ஜப்பானின் அபிலாஷைகளையும், விண்வெளியில் சூரிய மின்சக்தியை உருவாக்குவதற்கான வழிகளைக் கண்டறியவும் இந்த திட்டம் வழி வகுக்கும் எனவும் ஜப்பான் கூறியுள்ளது.

இதேவேளை, ஜப்பானின் அண்டை நாடான சீனாவும் 2030 ஆம் ஆண்டில் ஒரு பெரிய விண்வெளிப் பயண சக்தியாக மாறுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது, அத்துடன், விண்வெளி வீரர்களை சந்திரனில் களமிறக்க சீனாவும் திட்டமிட்டுள்ளது. இது ஆசிய விண்வெளிப் போட்டியை அதிகரிக்கும் எனக் கருதப்படுகிறது. (அ)

# அமெரிக்காவிலும் பிரான்ஸிலும் அதிக ஒமைக்ரோன் தொற்றாளர்

## எண்ணிக்கை மேலும் உயரலாம்

நியூயோர்க், டிசெ. 30

ஒமிக்ரோன் மாறுபாடு தொடர்ந்து பரவி வரும் நிலையில் நாளொன்றுக்கு அதிகளவிலான நோயாளிகள் அமெரிக்காவிலும் பிரான்ஸிலும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த திங்களன்று 4 இலட்சத்து 40 ஆயிரத்துக்கும் அதிகமான புதிய தொற்றுநோயாளிகள் இருப்பதாக அமெரிக்க நோய் மற்றும் தடுப்பு நிலையம் தெரிவித்துள்ளது.

கிறிஸ்மஸ் காலத்தில் கிடைத்த தாமதமான அறிக்கை காரணமாக எண்ணிக்கை அதிகமாக ஆக இருக்கலாம் என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதற்கிடையில், ஐரோப்பாவில் நாளொன்றுக்கு மிக அதிகளவிலான நோயாளிகள் பிரான்ஸில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஒரு இலட்சத்து 79 ஆயிரத்து 807 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பிரான்ஸ் சுகாதார அமைச்சர் கூறியுள்ளார்.



இதேநேரம் ஜனவரி தொடக்கத்தில் பிரான்ஸில் நாளாந்தம் 2 இலட்சத்து 50 ஆயிரம் நோயாளிகள் அடையாளம் காணக்கூடும் என சுகாதார அமைச்சர் எச்சரித்துள்ளார். (அ)

## மிக அரிதான பயணமாக இஸ்ரேல் சென்ற அப்பாஸ்!

ஜெருசலேம், டிசெ. 30

பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இஸ்ரேலுக்கு பயணம் செய்து, இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் பென்னி காண்ட்ஸை சந்தித்தார்.

பாதுகாப்பு மற்றும் சிவில் விவகாரங்கள் குறித்து இதன் போது இருவரும் பேசினர் என இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸின் இஸ்ரேலுக்கான மிக அரிதான பயணங்களில் ஒன்றாக இது அமைந்துள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தையின் போது பொருளாதார மற்றும் சிவில் விவகாரங்களில் நம்பிக்கையை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுப்பதற்கு இருவரும் இணங்கினர் என இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஓகஸ்ட் பிற்பகுதியில் பலஸ்தீனத்துக்கு விஜயம் செய்த இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் பென்னி காண்ட்ஸ், பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸை சந்தித்துப் பேசினார்.

பல வருடங்களின் பின்னர் இஸ்ரேல் -பலஸ்தீனம் இடையே இடம்பெற்ற முதல் உயர்மட்ட உத்தியோகபூர்வ சந்திப்பாக இது அமைந்திருந்தது.

எனினும் இந்தப் பேச்சுக்குப் பின்னர் கருத்து வெளியிட்ட இஸ்ரேல் பிரதமர் நப்தலி பென்னட், பலஸ்தீனியர்களுடன் எந்த சமாதான முன்னெடுப்புகளும் நடக்கவில்லை. அது நடக்காது என தெரிவித்தார்.

இதற்கிடையே பென்னி காண்ட்ஸ் - மஹ்மூத் அப்பாஸ் இடையிலான சந்திப்புக்கு இஸ்ரேலிய எதிர்க்கட்சியான லிகுட் கண்டனம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான எந்தவொரு விட்டுக்கொடுப்புக்கும் இடமில்லை என லிகுட் கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

பலஸ்தீனத்தின் மேற்குக் கரையில் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு முயற்சிகள் தொடரும்



நிலையில் இரு தரப்பு உறவுகள் சமீபத்திய ஆண்டுகளில் கணிசமாக மோசமடைந்துள்ளன.

லிகுட் தலைவர் பெஞ்சமின் நெதன்யாகு 2009 முதல் 2021 வரை பிரதமராக இருந்த போது, 2014 இல் இஸ்ரேல்-பலஸ்தீனம் இடையிலான அமைதிப் பேச்சுக்கள் இடைநிறுத்தப்பட்டன. அதனைத் தொடர்ந்து ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் யூதக் குடியேற்றங்கள் விரிவடைந்தன.

கடந்த ஜூன் மாதம் பொறுப்பேற்ற இஸ்ரேலின் கூட்டணி அரசின் பிரதமராக பலஸ்தீனிய அரசமைப்பை எதிர்க்கும் குடியேற்றப் பரப்புரைக் குழுவின் முன்னாள் தலைவரான வலதுசாரி நப்தலி பென்னட் தற்போது உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)



## 11,500 விமான சேவைகள் ரத்து!

நியூயோர்க், டிசெ. 30

ஒமைக்ரோன் தொற்று அச்சுறுத்தல் காரணமாக உலகம் முழுவதும் கடந்த வெள்ளிக்கிழமை முதல் நேற்று முன்தினம் வரையான காலப்பகுதியில் சுமார் 11,500 விமான சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

இதனால் பல ஆயிரக்கணக்கானோர் தங்களது விடுமுறைக் கால பயணங்களை கைவிட்டதுடன், சொந்த இடங்களுக்குச் சென்றவர்களும் மீண்டும் திருப்ப முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை முதல் இதுவரை 11,500 விமானங்கள் இரத்தாகியுள்ளன என சர்வதேச விமானப் போக்கு வரத்துகளை ஆய்வு செய்யும் பிளைட் அவேர் என்ற நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை 3,000 விமானங்களும், நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை 1,100 விமானங்களும் இரத்தாகியுள்ளன. ஒமைக்ரோன் பரவ லால் உலகம் முழுவதும் விமானப் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, கிறிஸ்மஸ் மற்றும் அதற்கு முதல் நாட்களில் மொத்தம் 5,900 விமானங்கள் இரத்துச் செய்யப்பட்டதையும் பிளைட் அவேர் சுட்டிக்காட்டியுள்ளது.

சீன மற்றும் அமெரிக்கா விமான நிறுவனங்களே அதிகளவில் விமான சேவைகளை இரத்துச் செய்துள்ளன.

வேகமாக பரவி வரும் ஒமைக்ரோன் திரிபு குறித்த கவலைகள் மற்றும் ஊழியர்கள் பற்றாக்குறையே விமான சேவைகள் இரத்துச் செய்யப்படக் காரணம் என விமான சேவை நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

# சிட்னி தண்டர் அணி சிறப்பான வெற்றி!

பிக் பேஷ் ரி-20 தொடரின் 24ஆவது லீக் போட்டி யில், சிட்னி தண்டர் அணி 34 ஓட்டங்களால் சிறப்பான வெற்றியை பதிவுசெய் துள்ளது.

கான்பரா மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இப்போட்டியில், சிட்னி தண்டர் அணியும் பெர்த் ஸ்கொர்சர்ஸ் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இப்போட்டியில் நாணயச் சுழற் சியில் வெற்றிபெற்ற பெர்த் ஸ்கொர் சர்ஸ் அணி, முதலில் களத்தடுப்பை தீர் மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத் தாடிய சிட்னி தண் டர் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 200 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, பிலிங்ஸ் 67 ஓட்டங் களையும் ஜேஸன் சங்கா ஆட்டமி ழக்காது 56 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பெர்த் ஸ்கொர்சர்ஸ் அணியின் பந்துவீச்சில், மெத் தியு கெலி 3 விக்கெட்டுகளையும் மிட்செல் மார்ஷ் 2 விக்கெட்டுகளையும் ஜேஸன் பெரென்டோர்ப் மற்றும் ஹென்ரிவ் டை ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.



இதனைத்தொடர்ந்து 201 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய பெர்த் ஸ்கொர்சர்ஸ் அணியால், 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 166 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந் தது. இதனால், சிட்னி தண்டர் அணி 34 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, கொலின் முன்ரோ ஆட்டமிழக் காது 64 ஓட்டங்களையும் ஹென்ரிவ்டை 44 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

சிட்னி தண்டர் அணியின் பந்துவீச்சில், நதன் மெக் ஹென்ரிவ் 3 விக்கெட்டுகளையும் சகீப் மகூத் மற்றும் கிறிஸ் கிறீன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் டேனி யல் சேம்ஸ் 1 விக்கெட்டி னையும் வீழ்த்தினர்.




## யுனைட்டெட்டுக்கு செல்லும் எமிலியானோ மார்ட்டின்ஸ்?

இங்கிலாந்து பிறீமியர் லீக் உதைபந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டின் கோல் காப்பாளரான டேவிட் டி கியாவை பிரதியிடுவதற்கான பட்டியலில் இன்னொரு பிறீமியர் லீக் கழகமான அஸ்டன் வில்லாவின் கோல் காப்பாளர் எமிலியானோ மார்ட்டின்ஸ் உள்ளார் என கூறப்படுகிறது.

டி கியாவுக்கு 31 வயதாகும் நிலையில், மார்ட்டின் ஸூக்கு 29 வயது என்பது குறிப்பிடத்தக்கது.



## கோலியின் பங்களிப்பின் மூலம் இந்திய டெஸ்ட் அணிக்கு பலன்

ஒரு அணியாக டெஸ்ட் கிரிக்கெட்டில் தொடர்ந் தும் முன்னேற்றம் காண விரும்புவதாக இந்திய அணி யின் தலைமை பயிற்றுவிப்பாளர் ராகுல் ட்ராவிட் தெரி வித்துள்ளார்.

மேலும் இதை வீரராகவும் அணியின் தலைவராகவும் அற்புதமாக செயற்படும் விராட் கோலியின் பங்களிப்பு மிக முக்கியமானது என அவர் கூறினார்.

டெஸ்ட் தொடரை விரும்பும் வீரர்களில் ஒருவரான விராட் கோலிக்கு இந்த தொடர் மிகவும் சிறப்பானதாக இருக்கும் என்றும் தெரிவித்தார்.

அவரது பங்களிப்பின் மூலம் இந்திய டெஸ்ட் அணிக்கு பலன் கிடைக்கும் என்றும் ராகுல் ட்ராவிட் நம்பிக்கை வெளியிட்டார்.

இதேவேளை ஒரு நாள் போட்டிக்கான இந்திய அணித் தலைவர் தெரிவு விவகாரம் தேர்வாளர்களின் முடிவு என்றும் அந்த விடயத்தை தற்போது அறிவிக்கப் போவதில்லை என்றும் ராகுல் ட்ராவிட் கூறினார்.

## பங்களாதேஷ் பிரீமியர் லீக்கில் ஒன்பது இலங்கை வீரர்கள்

ஜனவரி 21ஆம் திகதி ஆரம்பமாகின்ற பங்களாதேஷ் பிரீமியர் லீக் தொடரில் பங்கேற்கும் வாய்ப்பை ஒன் பது இலங்கை வீரர்கள் பெற்றுள்ளனர்.

2022ஆம் ஆண்டுக்கான பங்களாதேஷ் பிரீமியர் லீக் தொடரில் விளையாடும் வீரர்களை தெரிவுசெய்வதற் கான ஏலம் கடந்த திங்கள் நடைபெற்றது. இதன்போது பல்வேறு அணிகளினாலும் இலங்கை வீரர்கள் தேர்ந்தெ டுக்கப்பட்டனர்.

அதிரடி துடுப்பாட்ட வீரரான பானுக்க ராஜபக்ஷ, முன்னாள் அதிரடி சகலதுறை வீரர் திசர பெரேரா, சீக்குகே பிரசன்ன ஆகியோரை குல்னா ரைகர்ஸ் அணி ஏலம் மூலமாக ஒப்பந்தம் செய்திருக்கின்றது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான தனுஷ்க குணதிலக்க, மற்று மொரு ஆரம்ப துடுப்பாட்ட வீரர் நிரோஷன் டிக்வெல்ல ஆகியோர் போர்ச்சியுன் பரிசால் அணியில் இடம்பெற்றுள்ளனர்.

அதேவேளை, குசல் மெண்டிஸ் கொமிலா விக்டோ ரியன்ஸ் அணிக்காகவும், இசுரு உதான டாக்கா ஸ்டார்ஸ் அணிக்காகவும் விளையாடவுள்ளனர். இதே நேரம் வனிந்து ஹஸரங்கவும் பங்களாதேஷ் ப்ரீமியர் லீக் தொடரில் விளையாடவிருப்பதோடு, தினேஷ் சந்திமால் மற்றும் அஞ்சலோ பெரேரா ஆகியோர் இந்தத் தொடரில் சில்ஹட் அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

பங்களாதேஷ் பிரீமியர் லீக் தொடர் 2022ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21ஆம் திகதி தொடக்கம் பெப்ர வரி மாதம் 18ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.



## தேசிய ஒலிம்பிக் குழு தலைவராக மீண்டும் சுரேஷ் சுப்ரமணியம்

இலங்கை தேசிய ஒலிம் பிக் குழுவின் தலைவராக சுரேஷ் சுப்ரமணியம் மீண் டும் தெரிவு செய்யப்பட் டுள்ளார்.

அத்துடன் செயலாளர் நாயகம் பதவிக்கு மக்ஸ்வெல் டி சில்வாவும் பொருளாளர் பதவிக்கு காமினி ஜயசிங்க வும் மீண்டும் தெரிவாகினர்.

தேசிய ஒலிம்பிக் குழுவின் வருடாந்த பொதுக்கூட்ட மும் புதிய நிர்வாகிகள் தெரிவும் ஹேமசிறி பெர் னாண்டோ கேட்போர் கூடத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை மாலை நடைபெற்றது.

தன்னை எதிர்த்து போட்டியிட்ட மேஜர் ஜெனரல் பாலித்த பெர்னாண்டோவை 21 க்கு 12 வாக்குகள் வித்தியாசத்தில் சுரேஷ் சுப்ரமணியம் எதிர்பார்த்தவாறு இலகுவாக வெற்றி பெற்று தலைவரானார்.

செயலாளர் நாயகம் பதவிக்கு மீண்டும் போட்டி யிட்ட மக்ஸ்வெல் டி சில்வா 13 வாக்குகள் வித்தியா சத்தில் வெற்றி பெற்று அப் பதவியை தக்கவைத்துக் கொண்டார்.

மக்ஸ்வெல் டி சில்வாவுக்கு 23 வாக்குகளும் அவரை எதிர்த்து போட்டியிட்ட மொஹான் விஜெசிங்வுக்கு 10 வாக்குகளும் கிடைத்தன.

ஸ்கி மற்றும் ஸ்னோபோர்டிங் சங்கத்தைச் சேர்ந்த காமினி ஜயசிங்க 13 வாக்குகள் வித்தியாசத்தில் மீண்டும் பொருளாளராகத் தெரிவானார்.

ஜயசிங்கவுக்கு 23 வாக்குகளும் அவரை எதிர்த்து போட்டியிட்ட அஜித் சியம்பலாப்பிட்டியவுக்கு 10 வாக்குகளும் கிடைத்தன.

## பங்களாதேஷ் பிரிமியர் லீக் வீரர்கள் ஏலப்பட்டியலில் கனடா தமிழ் வீரர்!



பங்களாதேஷ் பிரீமியர் லீக் வீரர்கள் ஏலப்பட்டியலில் இலங்கையை பூர்வீக மாக கொண்ட கனடா தமிழ் வீரர் ஒரு வரின் பெயரும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

8ஆவது பங்களாதேஷ் பிரிமியர் லீக் அடுத்த வருடம் ஜனவரி மாதம் 21ஆம் திகதி ஆரம்பிக்கிறது. இந்த தொடரில் 6 அணிகள் பங்கேற்கின்றன.

இந்த அணிகளுக்கான வீரர்களின் ஏலப்பட்டியல் வெளியிடப்பட் டுள்ளது. இதில் கனடாவை சேர்ந்த தமிழ் வீரரான காவியன் நரேஸின் பெயரும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தை பூர்வீகமாக கொண்ட பெற்றோரின் மகனே காவி யன் நரேஸ் ஆவார்.

# அழுத்தங்களை மக்கள் தாங்கத் தயார் என்றால் சர்வதேச நாணய நிதியத்தை நாட அரசும் தயார்

## இப்படிக் கூறுகின்றார் அமைச்சர் பந்துல

கொழும்பு, டிசெ. 30

சர்வதேச நாணய நிதியம் முன்வைக்கும் யோசனைகளின் அழுத்தங்களை மக்கள் தாங்கிக் கொள்ளத் தயாராக இருப்பார்களாக இருந்தால் சர்வதேச நாணய நிதியத்திடம் செல்ல அரசு தயாராக இருக்கின்றது என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் மேலும் தெரிவித்த அவர்,

"பொருளாதாரம் வளர்ச்சிப் பாதையில் சென்ற நாட்டையே நாம் 2014ஆம் ஆண்டு ஒப்படைத்தோம். எனினும், அதன் பின்னர் ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசு நாட்டின் பொருளாதாரத்தை வீழ்ச்சியடையச் செய்தது.

சர்வதேச நாணய நிதியத்துக்கு செல்ல வேண்டும் என்கிறார்கள். கடந்த அரசும் அங்கு சென்று கடனைப் பெற்றுக் கொண்டதால் எரிபொருள் விலை சூத்திரம், எரிவாயு, பால் மாக்கள் உள்ளிட்ட பொருள்களின் விலைகள் கடந்த அரசில் அதிகரித்தன.

மக்கள் விரும்பினால் சர்வதேச நாணய நிதியத்திடம் செல்வதில் அரசுக்குப் பிரச்சினைகள் இல்லை. 16 தடவைகள் சர்தேச நாணய நிதியத்திடம் சென்றிருக்கிறோம். குறிப்பாக நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பு குறையும்போது 11 தடவைகள் சர்தேச நாணய நிதியத்தின் உதவியை நாடியிருக்கின்றோம்.

இறுதியாக ஐக்கிய தேசியக் கட்சி சர்வதேச நாணய நிதியத்திடம் சென்றிருந்தது. இதனால் 2016 - 2019ஆம் ஆண்டு வரையில் சர்வதேச நாணய நிதியத்தின் பிடியிலேயே இலங்கை இருந்தது.

சர்வதேச நாணய நிதியம் முன்வைக்கும் யோசனைகள் சரியானதே. எனினும், இலங்கை போன்ற நாடுகளில் அந்த யோசனைகளை நடைமுறைப் படுத்தும்போது மக்கள் பாரிய அழுத்தங்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும். எவ்வாறாயினும் மக்கள் இந்த அழுத்தங்களை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்பார்களாக இருந்தால் நாணய நிதியத்திடம் செல்ல அரசு தயாராக இருக்கின்றது" - என்றார். (இ)



# மோட்டார் சைக்கிள் கால்வாயில் விழுந்ததில் மாணவன் மரணம்!

கொழும்பு, டிசெ. 30

மரமொன்றில் மோதிய மோட்டார் சைக்கிள் கால்வாயில் விழுந்ததில் 13 வயதுடைய பாடசாலை மாணவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். அத்துடன், மேலும் இரு மாணவர்கள் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தம்புள்ளை, கலுந்தாவ பரணகம பிரதேசத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது எனத் தம்புள்ளை பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் தம்புள்ளை, பஹல அரவுல பகுதியைச் சேர்ந்த ரஷ்மிகா தினேஷ் சத்சர ஏகநாயக்க என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

காயமடைந்த 15 மற்றும் 16 வயதுடைய பாடசாலை மாணவர்கள் இருவரும் தம்புள்ளை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

குறித்த மாணவர்கள் நண்பன் ஒருவரின் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த வேளை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. (இ)

# அரசின் இயலாமையை மூடிமறைக்க செயலாளர்களை மாற்றும் ஜனாதிபதி

## சஜித் அணி குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 30

அரசின் இயலாமையை மூடி மறைக்க ஜனாதிபதி, அமைச்சுக்களின் செயலாளர்களை மாற்றிக் கொண்டு வருகின்றார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"அமைச்சுக்களின் செயலாளர்களையோ அல்லது ஜனாதிபதியின் செயலாளர்களையோ மாற்றுவதை நாட்டு மக்கள் எதிர்பார்க்கவில்லை. நாட்டு மக்கள் மூன்று வேளை உண்ண முடியாத நிலைக்கு வந்துள்ளனர்.

2022ஆம் ஆண்டு நிறைவடையும்போது சுற்றுலாத் துறையின் ஊடாக 3.5 பில்லியன் டொலர்கள் நாட்டுக்குக் கிடைக்கும் என மத்திய வங்கியின் ஆளுநர் சிரித்துக் கொண்டே கூறுகின்றார். ஆனால், உண்மையில் அரசு டொலர்களுக்காக வெளிநாடுகளில் பிச்சை எடுக்கின்றது.

நாடு சுதந்திரமடைந்ததன் பின்னர் ஆட்சி செய்த எந்தவொரு அரசும், தற்போதைய அரசு போல வெளிநாடுகளுக்குச் சென்று டொலர் பிச்சை எடுத்ததில்லை" - என்றார். (இ)




இராவ்பகதூர்

சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்களின்

122ஆம் ஆண்டு சிரார்த்த தின விழா



இடம் : யா/ஏழாலை மகாவித்தியாலையத்தில் அமைந்துள்ள நினைவாலயம்

காலம் : 01.01.2022 சனிக்கிழமை

நேரம் : காலை 10.00 மணி

விஷேட பூசை வழிபாடு

சிவஸ்ரீ ஐயப்பதாச குருக்கள்

(கட்டுவன் சபரிகிரீ தேவஸ்தான மகா குருபீட முதல்வர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

சி.வை.தாமோதரம்பிள்ளை ஞாபகார்த்த சபையும்

மத்திய சனசமூக நிலையமும்

முன்பள்ளி சமூகமும்


# அடுத்த வருடத்தில் நீண்ட விடுமுறைகள்

கொழும்பு, டிடிசு. 30

எதிர்வரும் 2022 ஆம் ஆண்டு நீண்ட விடு முறை நாட்களைக் கொண்ட ஆண்டாக காணப்படுகின்றது.

அதாவது 2022 ஆண்டில் 43 நீண்ட விடுமுறை நாட்கள் காணப்படுகின்றன.

எதிர்வரும் ஆண்டுக்கான நாட்காட்டியின்படி, இந்த நீண்ட விடுமுறைகளைத் தெளிவாகக் காணக்கூடியதாக உள்ளது.

இதன்படி, 2022ஆம் ஆண்டுக்கான நீண்ட விடுமுறை நாட்கள் பின்வருமாறு:-

ஜனவரி மாதம் 14, 15, 16 மற்றும் 17ஆம் திகதிகளும், பெப்ரவரி மாதம் 04, 05 மற்றும் 06 ஆம் திகதிகளும், மார்ச் மாதம் 17,18,19 மற்றும் 20 ஆம் திகதிகளும், ஏப்ரல் மாதம் 13, 14, 15, 16, 17ஆம் திகதிகளும், ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் தொடர்ச்சியாக 30, 01, 02 மற்றும் 03ஆம் திகதிகளும், மே மாதம் 14, 15 மற்றும் 16 ஆம் திகதிகளும், ஜூன் மாதம் 11, 12, 13 மற்றும் 14 ஆம் திகதிகளும், ஆகஸ்ட் மாதம் 11, 12, 13 மற்றும் 14 ஆம் திகதிகளும், ஒக்டோபர் மாதம் 08, 09, 10ஆம் திகதிகளும், 22, 23 மற்றும் 24 ஆம் திகதிகளும், நவம்பர் மாதம் 05, 06 மற்றும் 07 ஆம் திகதிகளும், டிசம்பர் மாதம் 24, 25 மற்றும் 26 ஆம் திகதிகளும் 2022 ஆம் ஆண்டில் நீண்ட விடுமுறை நாட்களாகக் காணப்படுகின்றன. (இ)






தனேந்திரன் லீலாவதியின் அன்பளிப்பாக கோப்பாய் J/261 கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த 25 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதி நேற்று முன்தினம் காலை வழங்கப்பட்டது.

கோப்பாய் பிரதேச தேசோதைய சபையின் அலுவலகத்தில் அதன் தலைவர் இ.மயில்வாகனம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பூமணி அம்மா அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி நா.தனேந்திரன் உட்பட சபையின் செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்டனர்.

### அனைத்து...

பேசிய சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த அறக்கட்டளையின் பிரதிப் பணிப்பாளர் ஜே.தியாகராஜா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

1978ஆம் ஆண்டு அரசியலமைப்பு பலமுறை திருத்தப்பட்டது. அதன் குறைபாடுகளை நிவர்த்தி செய்து, அனைவரையும் சமமாக நடத்தும் வகையிலான புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இந்நாட்டின் பல்வேறு இனங்கள் தனித்துவமான சட்ட முறைமைகளைக் கொண்டிருந்தாலும், அந்தச் சட்ட முறைமைகள் எவற்றாலும் ஆதரிக்கப்படாத சலுகைகள் குறைந்த மக்களாகத் தங்கள் மக்கள் காணப்படுகின்றனர் என்றும் தியாகராஜா எடுத்துரைத்தார்.

முன்னைய அரசர் காலத்தில், இலங்கைக்கே உரித்தான சட்ட முறைமையொன்று நடைமுறையில் இருந்ததை நிரூபிப்பதற்கான ஆதாரங்கள் தற்போது கிடைத்துள்ளன என்றும் புதிய சட்ட முறைமையொன்றை உருவாக்குவதற்கு அது அடிப்படையாக அமையும் என்றும், தியாகராஜா அவர்கள் சுட்டிக்காட்டினார்.

1956ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட அரசகரும மொழிச் சட்டம், தோட்டத் தொழிலாளர்களின் கல்வித் தரத்தைச் சீரழித்ததுடன், அவர்களை பொருளாதார ரீதியாகவும் பாதிப்படையச் செய்தது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

குழுவின் உறுப்பினர்களான பேராசிரியர் ஷாந்தி நந்தன விஜேசிங்க, சிரேஷ்ட விரிவுரையாளர் சுமேத வீரவர்தன, சட்டத்தரணி சஞ்சய மாரம்பே மற்றும் பாணி வேவல ஆகியோரும் இச்சந்தர்ப்பத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

### மஹிந்தவே...

டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அரசியலில் இருந்து ஓய்வுபெறவுள்ளார் எனத் தகவல்கள் பரப்பப்பட்டுவருகின்றன. இதன் பின்னணியில் சூழ்ச்சி இருக்கக்கூடும். பிரதமரை வெளியேற்றுவதற்கு சிலர் முற்படக்கூடும். பிரதமர் ஓய்வுபெறுவதாக இருந்தால் எமக்கு அறிவித்துவிட்டே செல்வார். அவர் தற்போது ஓய்வுபெறக்கூடாது. ஜனாதிபதிக்கு பக்க பலமாக இருக்கவேண்டும்.

கட்சி அரசியல்தான் இந்த நாட்டுக்கு சாபக்கேடு. தன்னை சூழவுள்ள சூழ்ச்சிக்காரர்களை ஜனாதிபதி இனங்காண வேண்டும்-என்றார். (அ)

### 'மொட்டு' அரசின்...

கவும் முடியாது; கவிழ்க்கவும் முடியாது."

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தவிசாளரும் வெளிவிவகார அமைச்சருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

'மொட்டு' அரசு விரைவில் கவிழும் என்று சஜித் பிரேமதாஸ தலைமையிலான எதிரணியினர் வெளியிட்டு வரும் கருத்துக்களுக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

"ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி என்ற இந்தக் கட்சியை ஆரம்பிக்கும் போது நாம் பல சவால்களை எதிர்கொண்டோம். எனினும், அந்தச் சவால்களை முறியடித்து தனிப் பெரும் கட்சியாக பொதுஜன முன்னணியை வளர்த்தெடுத்துள்ளோம். இதற்கு மக்களின் அமோக ஆதரவே முக்கிய காரணம். இப்போது எவராலும் அசைக்க முடியாத மாபெரும் கட்சியாக - கூட்டணியாகப் பொதுஜன முன்னணி திகழ்கின்றது.

எதிரணியினர் நினைப்பது போல் பொதுஜன முன்னணிக்குள் முரண்பாடுகள் எதுவும் இல்லை. இங்கு கருத்துச் சுதந்திரத்துக்கு இடமுண்டு. எவரும் கருத்துக்களைப் பகிரங்கமாகத் தெரிவிக்க முழுச் சுதந்திரம் உண்டு.

ஒரு சிலரின் உணர்ச்சி மிகுந்த கருத்துக்களை வைத்துக்கொண்டு எதிரணியினர் அரசியல் நடத்துகின்றனர்.

எதிரணியினரின் இந்தச் சிறுபிள்ளைத்தனமான அரசியல் பரப்புரைக்கு மக்கள் எவரும் செவிசாய்க்கக்கூடாது.

2022ஆம் ஆண்டில் எமது அரசின் வேலைத்திட்டங்களை நாடெங்கும் விஸ்தரிக்கவுள்ளோம். பொருளாதாரப் பாதிப்பிலிருந்து நாம் மீண்டெழுவோம். இந்த நம்பிக்கை இன்னமும் வீண்போகவில்லை" - என்றார். (இ)

### கைதான மீனவர்...

"இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள மீனவர்கள் 68 பேரையும் மீட்க, இந்திய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே, நீதிமன்றம் தலையிட்டு அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கவும் தேவையான சட்ட உதவிகளுக்கும் உத்தரவிட வேண்டும்" என்று கோரியிருந்தார்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் சி.வி.கார்த்திகேயன், ஸ்ரீமதி ஆகியோர், "68 மீனவர்களை இந்தியா அழைத்து வர என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது" என்று கேள்வி எழுப்பினர்.

தமிழ்நாடு அரசு தரப்பில், "68 மீனவர்களையும் அழைத்து வர இந்திய உள்துறை அமைச்சருக்கு தமிழ்நாடு முதலமைச்சரின் கடிதம் அனுப்பப்பட்டு உள்ளது" என்று கூறப்பட்டது.

மத்திய அரசு தரப்பில், "மீனவர்களை இந்தியா கொண்டு வர இலங்கை வெளியுறவுத் துறையுடன் தொடர்பு கொள்ளப்பட்டு வருகிறது. இது குறித்து விரிவான அறிக்கை தாக்கல் செய்ய கால அவகாசம் வேண்டும்" எனத் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து நீதிபதிகள், "ஜனவரி மாத தொடக்கத்திலேயே 68 மீனவர்களும் அவர்கள் குடும்பத்தை சந்திக்க துரிதமாக நடவடிக்கை எடுங்கள்" என அறிவுறுத்தினர். இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து, மத்திய அரசு தரப்பில், விரிவான பதில் மனுவை நாளை தாக்கல் செய்ய உத்தரவிட்டனர். வழக்கு விசாரணையை நாளை வரை ஒத்தி வைத்தனர்.

### பிரதமரின் டுபாய்...

எக்ஸ்போ கண்காட்சியில் பிரதம அதிதியாகக் கலந்துகொள்ளுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், இதற்காக ஜனவரி 2ஆம் திகதி டுபாய் புறப்படுவதற்குப் பிரதமர் திட்டமிட்டிருந்தார்.

எனினும், இலங்கையில் அதிகரித்து வரும் பொருளாதார நெருக்கடிகள் உள்ளிட்ட காரணங்களால் பிரதமர் தனது டுபாய் பயணத்தை இரத்துச் செய்துள்ளார் என்று பிரதமரின் தலைமை அதிகாரி யோஷித ராஜபக்ஷ உறுதிப்படுத்தியுள்ளார். (இ)

### வடக்கு மாகாண...

தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வடக்கு மாகாணத்தில், இந்த மாதத்தின் முதல் 27 நாட்களில் 265 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இந்த நிலைமை நீடித்தால், எதிர்வரும் ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் வடக்கு மாகாணத்தில் டெங்கு நோய் பரவல் தீவிரமடையும் அபாய நிலை உள்ளது.

எனவே, பொதுமக்கள் தங்களது வாழ்விடங்கள், பணியிடங்கள் உட்பட பொது இடங்களையும் சுத்திகரித்து, நுளம்புகள் உருவாகக்கூடிய இடங்களை அழிக்க வேண்டும்" - என்றார். (இ - 03)

# கிண்ணியா 'பட்ஜெட்' மீளவும் தோற்கடிப்பு

## சபை முன்றிலில் அமைதியின்மை

கிண்ணியா, டிசெ. 30

கிண்ணியா நகர சபையின் வரவு - செலவுத் திட்டத்தின் 2ஆவது வாசிப்பும் தோல்விய டைந்துள்ளது.

கிண்ணியா நகர சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் 2ஆவது வாசிப்பு, நகர சபைத் தலைவர் எஸ்.எச்.எம்.நளீமினால் முன் வைக்கப்பட்டது.

அதற்கு எதிராக 8 வாக்குகளும், ஆதரவாக 5 வாக்கு களும் அளிக்கப்பட்டன. அதற் கமைய வரவு - செலவுத் திட் டம் தோற்கடிக்கப்பட்டது.

கிண்ணியா நகர சபையில் அகில இலங்கை மக்கள் காங்கி ரஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கி ரஸ், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் நல்லாட்சிக்கான தேசிய முண்ணனி என கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் அங்கம் வகித்து வருகின்ற நிலையில், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரே தற்போதைய வரவு - செலவு திட்டத்தின்போது தோற்கடிக் கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் 14 நாள்களுக்குள் புதிய தவிசாளர் தெரிவு இடம் பெறலாம் எனவும் எதிர்பார்க் கப்படுகின்றது.

சபை அமர்வு முடிவுற்ற பின்னர் சபை முன்றலில் தலை வர் மற்றும் எதிர்த்தரப் பினர் களுக்கிடையே அமைதியின்மை யும் ஏற்பட்டது. (இ)

# மருத்துவவியல் தொழில்வல்லுநர்கள் இன்று பணிப்புறக்கணிப்பு போராட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 30

யாழ்.போதனா வைத்தியசாலை உட்பட வடக்கு மாகாணத்திலுள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் கடமையாற்றும் நிறைவுகாண் மருத்துவவியல் தொழில்வல்லுநர்கள் இன்று பணிப்புறக்கணிப்புப் போராட்டத்திலும் மாபெரும் பேரணியிலும் ஈடுபடவுள்ளார்கள். அன்றையதினம் வழமையான மருத்துவ ஆய்வுகூட சேவை, கதிரியக்க சேவை, மருந்துவழங்கல் சேவை தொழில் சிச்சை வழங்கல் செவை என்பன இடம்பெறமாட்டாது.

மட்டுப்படுத்தப்பட்ட அளவில் உயிர்காக்கும் அவசர சிகிச்சைகள் மட்டும் நடைபெறும்.

இப்போராட்டத்தில் வடமாகாண தாதியர் சங்கம் உட்பட ஏனைய சுகாதார தொழில் சங்கங்களும் இணையவுள்ளன.

### அதிரடி...

நாடு திரும்பிய கையோடு முக்கியத்துவமிக்க அரசியல் சந்திப்புகளை நடத்துவதற்கும் பஸில் திட்டமிட்டுள்ளார். அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

ஜனாதிபதி செயலாளர் பதவியில் இருந்து விலகும் பிபி ஜயசுந்தரவுக்கு நிதி அமைச்சில் வழங்கப்படவுள்ள பொறுப்பு பற்றியும் ஆராயப்படவுள்ளது. (இ)

### பளை பொலிஸ்...

திகதி விடுமுறைக்கு கண்டி சென்று திரும்பியிருந்த நிலையில் நேற்று தொடர்ச்சியான காய்ச்சல் ஏற்பட்டது.

இதையடுத்து மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### கொரோனாவால்...

விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இவ்வாறு உயிரிழந்துள்ளவர்களில் 14 ஆண்களும், 7 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 944 ஆக அதிகரித்துள்ளது. (இ)

### ஜனவரி...

பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பஸ் கட்டண திருத்தம் தொடர்பாக தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தினர் நேற்றுப் போக்குவரத்து அமைச்சின் அதிகாரிகளுடன் முன்னெடுத்த கலந்துரையாடலின்போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதற்கு முன்னர் குறைந்தபட்ச பஸ் கட்டணம் 14 ரூபாவாக இருந்த நிலையிலேயே தற்சமயம் மூன்று ரூபாவால் அது அதிகரிக்கப்பட்டுள்ளது. (இ)

# முன்னாள் டி.ஐ.ஜி. அரசரெட்ணம் காலமானார்



கொழும்பு, டிசெ. 30

ஓய்வு பெற்ற பிரதிப் பொலிஸ் மா அதிபர் கே.அரசரெட்ணம் கொழும்பில் நேற்று காலமானார். அவருக்கு வயது 70.

சுகவீனம் காரணமாக கொழும்பில் தனியார் மருத்துவமனை ஒன்றில் சிகிச்சைபெற்றுவந்த நிலையிலேயே அவர் மரணமடைந்ததாகவம். இறுதிக்கிரியைகள் வெள்ளிக்கிழமை இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

### 13ஆவது திருத்த...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதைவிடுத்து முஸ்லிம் அரசியல் கட்சிகள் தமிழ் கட்சிகளிடமிருந்து பிரிந்து செல்லும் பட்சத்தில் அரசியல் ரீதியாக பலவீனமான ஒரு நிலையையே அடைய முடியும்.

ஆகவே இந்தியப்பிரதமர் நரேந்திர மோடிக்கு 13-வது திருத்தச்சட்டத்தை அமுலாக்கக்கோரி அனுப்பிவைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள கடிதத்திற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் ஏனைய முஸ்லிம் அரசியல் தரப்பினரும் ஆதரவளிப்பதே காலத்தின் தேவையாகும்.

ஈழநாடு
Eelanadu


## மரண அறிவித்தல்

அன்னை மடியில் 26 . 03 . 1949



ஆண்டவன் அடியில் 26 . 12 . 2021

### அப்புக்குட்டி கணபதிப்பிள்ளை

**முன்னாள் சிரேஸ்ட விரிவுரையாளர்- யாழ். பல்கலைக்கழகம்**

யாழ். நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி உருத்திரபுரம், யாழ்ப்பாணம், கனடா Markham ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட அப்புக்குட்டி கணபதிப்பிள்ளை அவர்கள் 26-12-2021 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புக்குட்டி - நாகமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிறிஸ்கந்தராசா - புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெயஸ்ரீ அவர்களின் அன்புக் கணவரும், சஞ்சீவ், சரணியன் ஆகியோரின் அன்புத் தந்தையும், Staphani அவர்களின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற முருகேசு, பார்வதி மற்றும் மயில்வாகனம், சின்னம்மா, தனலட்சுமி, சதாசிவம், மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும்,புவிராஜ், ரவிராஜ், சுகந்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும், Fransisjaya அவர்களின் அன்புப் பேரனும் ஆவார்.

பார்வைக்கு
Thursday, 30 Dec 2021 10:30 AM - 1:30 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre
8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

தகனம்
Thursday, 30 Dec 2021 2:30 PM
Forest Lawn Mausoleum & Cremation Centre 4570 Yonge St, North York, ON M2N 5L6, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**ஜெயா - மனைவி**
Mobile : +16477780967
**சதா - சகோதரன்**
Mobile : +16476540609

தகவல்:
**குடும்பத்தினர்.**







# ராஜபக்ஷவினரால் நாட்டுக்கு மிகவும் மோசமான பேரழிவு

## சம்பிக்க பகிரங்கக் குற்றச்சாட்டு



கொழும்பு, டிசெ. 30

**முப்பது ஆண்டுகள் போரில் இருந்து நாட்டை விடுவித்ததாகக் கூறிய ராஜபக்ஷவினர் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனை விட நாட்டுக்கு மிக மோசமான பேரழிவைத் தேடி தந்துள்ளனர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.**

ஊடகங்களிடம் கருத்து வெளியிடும்போதே சம்பிக்க ரணவக்க இதனைக் கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது: -

"ஆழிப்பேரலை அனர்த்தத்தை விட மிக மோசமான அனர்த்தம் நாட்டுக்கு ஏற்பட்டுள்ளது.

அரசில் இருக்கும் பலரும், ராஜபக்சவினருக்கு வாக்களித்தவர்களும் இந்த அழிவைப் புரிந்து கொண்டுள்ளனர்.

நாட்டை மிக மோசமான நிதி நெருக்கடி நோக்கிக் கொண்டு சென்றவர்கள் ராஜபக்ஷ குடும்பத்தினர் என்பது உலகத்துக்குத் தெளிவாகியுள்ளது.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவாகி பல மாதங்கள் முக்கிய அமைச்சுக்களுக்கான செயலாளர்களை நியமிக்க முடியாமல் போனது. இதன் மூலம் நாட்டை முன் நோக்கிக் கொண்டு செல்ல ஜனாதிபதி தயாரில்லை என்பது தெளிவானது" - என்றார். (இ)

# வரலாற்றில் இடம்பிடிப்பார் ஜனாதிபதி

## அமைச்சர் ஜோன்ஸ்டன் நம்பிக்கை

கொழும்பு, டிசெ. 30

கொரோனா வைரஸ் தொற்று நோயின்போது குடிமக்களின் பாதுகாப்பை உறுதி செய்த 10 சிறந்த உலக தலைவர்களில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவும் ஒருவர் என்று அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இதனால் ஜனாதிபதி வரலாற்றில் இடம் பெறுவார் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -



"கொரோனா வைரஸ் தொற்று நோய் ஏற்பட்டபோது அனைத்து நாடுகளும் பொருளாதார சவால்களை எதிர்கொண்டன.

உலகத் தலைவர்கள் உயிர்களைக் காப்பாற்றுவதில் பெரும் சவாலை எதிர்கொண்டனர்.

ஜனாதிபதியின் விடா முயற்சியால் நாடு முழுவதும் தடுப்பூசிகள் போடும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கொரோனாத் தடுப்பூசித் திட்டத்துக்கு எதிர்க்கட்சிகள் ஆதரவளிக்கவில்லை. இந்தத் திட்டத்தை நாசப்படுத்தவே முயன்றனர்" - என்றார். (இ)

# 'மொட்டு'வின் கொடூர ஆட்சியை விரைவில் விரட்டியடிப்பர் மக்கள்

## முன்னாள் எம்.பி. சமன் ரத்னப்பிரிய சூளுரை

கொழும்பு, டிசெ. 30

"ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் கொடூர ஆட்சியை நாட்டு மக்கள் விரட்டியடிக்கும் காலம் வெகுதொலைவில் இல்லை."

- இவ்வாறு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சமன் ரத்னப்பிரிய தெரிவித்தார்.

சுனாமி அனர்த்தத்தைப் போன்ற பேரழிவு, மொட்டு எனும் சுனாமியால் நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சுனாமி நினைவு தினத்தை சில தினங்களுக்கு முன்னரே அனுஷ்டித்தோம்.

சுனாமி அனர்த்தம் என்பது நாட்டில் ஒரு நாள் ஏற்பட்ட பேரழிவாகும். புள்ளிவிவரத் தகவலின்படி சுனாமி அனர்த்தத்தால் நாட்டில் 38 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.

அரை மணித்தியாலத்தில் பாரிய பேரழிவு நாட்டில் ஏற்பட்டது. இந்தப் பேரழிவு ஒவ்வொரு வருடமும் நினைவுகூரப்பட்டு வருகின்றது.

அவ்வாறான ஒரு பேரழிவு நாட்டில் மீண்டும் ஏற்படக் கூடாது என்பதே எமது பிரார்த்தனை.

தற்போதைய நிலையில் சுனாமி பேரழிவைவிட பாரிய பேரழிவை மொட்டுக் கட்சி நாட்டில் ஏற்படுத்திக்கொண்டு இருக்கின்றது.

தேசிய பாதுகாப்பைப் பிரதானப்படுத்தி ஆட்சிக்கு வந்த 'மொட்டு' சுனாமி, இன்றைய நிலையில் நமது நாட்டை மூழ்கடித்துக்கொண்டும் சீரழித்துக்கொண்டும் உள்ளது" - என்றார். (இ - கே)

# பாம்பு தீண்டி சிகிச்சை பெற்ற நபர் பத்து நாட்களின் பின்னர் மரணம்!

யாழ்ப்பாணம், டிசெ. 30

யாழ்., அனலைதீவில் பாம்பு தீண்டியதால் சிகிச்சை பெற்று வீடு திரும்பிய குடும்பஸ்தர் ஒருவர் வீடு திரும்பி பத்து நாட்களின் பின் உயிரிழந்துள்ளார்.

அனலைதீவு, 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கார்த்தி கேசு ரவீந்திரன் (வயது 47) என்ற 3 பிள்ளைகளின் தந் தையே இவ்வாறு உயிரிழந்தார்.

கடந்த 16ஆம் திகதி வீட்டு முற்றத்தில் நின்றிருந்த போது இனந்தெரியாத வகை பாம்பு ஒன்று அவரைத் தீண்டியுள்ளது.

அதற்குச் சிகிச்சை பெற்று மறுநாள் அவர் வீடு திரும் பியுள்ளார். பின் கடந்த 26ஆம் திகதி அவருக்கு திடீ ரென மயக்கம் ஏற்பட்டமையால் அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இருந்தபோதிலும் அவர் சிகிச்சை பலனளிக்காமை யால் உயிரிழந்தார் என்று விசாரணைகளில் தெரியவந் துள்ளது. (இ - 03)






இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 30.12.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் உளவள துனையாளர்
திரு.நா. நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி-ஜோன்சன்
ராஜ்குமார் ஆசிரிய ஆலோசகர்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர்
விவியன் சத்தியசீலன்



7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ - மறுஒளிபரப்பு
**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை




1.00 மணி : நலம்தானா-மறுஒளிபரப்பு
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-வேலையில்லா
பட்டதாரி,சகுனி
திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான
நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : வெள்ளித்திரை-ஜெயில்
**இரவு**
7.00 மணி : சமையல் சமையல்
7.30 மணி : வெள்ளிடை நுட்பம்-
தொழில்நுட்பம் பயன்பாடுபற்றிய
நிகழ்ச்சி
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : கச்சேரி ஆரம்பம்



10.00 மணி : நேருக்கு நேர்-அரசியல் நிகழ்ச்சி

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே
**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப்
பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்
**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்
**இரவு**
7.00 மணி : க.பொ.த. சாதாரண தர
மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : அன்னை மரியா (மறுஒளிபரப்பு சனி)
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை
(மறு ஒளிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஞானவழி மறு ஒளிபரப்பு ஞாயிறு
**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை
(மறு ஒளிபரப்பு)

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்